
www.ekuruvi.com
# ஈகுருவி

சிறகு - 01 01.06.2012 பறப்பு -01

THE LAW OFFICE OF
GaryAnandasangaree
PROFESSIONAL CORPORATION
• Real Estate (Buying, Selling & Re-Financing)
• Corporate • Commercial
• Wills & Estates • Immigration
416-321-1100
gary@galaw.ca




உங்களையும் உடமைகளையும் பாதுகாத்திட எம்மை நாடுங்கள்

ekuruvi Special
3 Months Free with this Ad.
Existing Alarm Monitoring 11.99/per month
Residential Alarm Monitoring $17.99/per month
Limited time offer, New Customers only
Say Goodbye to the Contract ! No Credit Check
NOBLE REIGN INC
SECURITY & COMMUNICATIONS
www.noblereign.com Tel : 416-826-5831


Life100.ca
Sritharan Thurairajah
Insurance Advisor
Qualifying Member Million Dollar Round Table
MDRT The Premier Association of Financial Professionals®
759 Warden Ave., Scarborough, ON, M1L 4B5
Office: 416-759-5453 Ext: 407 Fax: 416-759-6220
Tel: 416-918-9771
E-mail: info@life100.ca Web: www.life100.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்கார்பரோ மருத்துவமனை நிதிசேர் நடை பேரணி!

## தமிழராய் ஒன்றிணைவோம்! எம் பெருமை காட்டிடுவோம்!

ரொறொண்ரோவின் ஸ்கார்பரோ பகுதியில் பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வாழுகின்றோம். எமது மக்களின் உடல் ஆரோக்கியத்திலும், பாதுகாப் பிலும் பாரிய பங்கினை வகிப்பது பேர்ஸ்மவுண்ட் மருத்துவமனை, ஸ்கார்பரோ பொது மருத்துவமனைகளை உள்ளடக்கிய ஸ்கார்பரோ மருத்துவமனை (The Scarborough Hospital -TSH) ஆகும். இது தனது சேவையை தொடர்ந்து மக்களுக்கு வழங்குவதற்கும், அதன் நிதித் தேவையினை பூர்த்தி செய்வதற்கும் எதிர்வரும் யூன் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நிதிசேர் நடைபேரணி ஒன்று தமிழ் உறவுகளால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுதோரும் 7,000 ஆயிரம் குழந்தைகள் இம் மருத்துவமனைகளில் பிறக்கின்றார்கள். இதில் அதிக எண்ணிக்கையான குழந்தைகள் எமது தமிழ் குழந்தைகள் என்பது முக்கிய விடயமாகும். எனவே அர்ப்பணிப்பு உணர்வுகொண்ட சமூக சிந்தனையாளர்களிடமிருந்து இதுவரை $175,000 நிதியாக சேகரிப்பட்டு வைத்தியசாலைக்கு வழங்கியதன் மூலம் தமிழர்களாகிய நாம் மருத்துவமனையின் ஒரு பங்காளராக மாறியிருக்கின்றோம்.

அதிகரித்து வரும் மக்கள் தொகையினால் வைத்திய சாலையின் தேவைகளும் அதிகரித்துள்ளமையால் இம்முறை அதிகளவு நிதியினை மருத்துமனை மக்களிடமிருந்து எதிர்பார்த்து நிற்கின்றது.

உறுதியும் கொடையுள்ளமும் கொண்ட மக்களாகிய நாம் எம் நாட்டிற்காக மட்டுமன்றி கனடா வாழ் அனைத்து சமூகங்களுக்குமாக உழைப்பவர்கள் என எதிர்வரும் யூன் 3 ஆம் நாள் நிதி சேர் பேரணியில் இணைவதன் மூலம் அனைத்துக் கனடியர்களுக்கும் காட்டும் நாளாக இதனை மாற்றுவோம். எனவே இந்த பேரணியில் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்களாகிய கனடா வர்த்தக சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இடம் : கிட்ஸ்டவுன் வோட்டர் பார்க் , 3159 பேர்ஸ்மவுண்ட் ரோடு, ஸ்கார்போரோ (Kidstown Water Park, 3159 Birchmount Road, Scarborough)

பதிவு நேரம் : காலை 8 மணி, நடைப்பயணம் தொடங்கும் நேரம் : காலை 9 மணி

# போதைப் பழக்கத்திற்கு அடிமையாதல் மற்றும் மனநல மையத்திற்கு உதவும் கனடியத் தமிழ் பேரவையின் கனடிய தமிழர்களின் நடைபவனி



போதைப் பழக்கம் மற்றும் மனநலம் குன்றியோரின் மறுவாழ்வுக்காக சேவை புரியும் ரொறொண்ரோவில் அமைந்துள்ள CAMH (Centre for Addiction and Mental Health) க்கு நிதி சேகரித்து வழங்கும் வகையில் நடைபவனி ஒழுங்கு செய்யப்பட்டிருகின்றது. CAMH ஆனது போதைப் பழக்கம் மற்றும் மனநலம் தொடர்பான கனடாவின் மிகப் பெரிய போதனா வைத்தியசாலையாகும். உலகம் முழுவதும் தனது தொடர்புதளத்தை வைத்திருக்கின்ற CAMH ஆண்டுதோரும் ஆயிரக்கணக்கான தொழில் நெறிஞர்களை உருவாக்குவதுடன் பொது கொள்கை மற்றும் சுகாதார தடுப்பு உத்திகளை . தகவலறிந்து உருவாக்கின்றது.

இதே போன்ற நடைபவனியை கனடியத் தமிழர்கள் முன்று தடவை ஏற்கனவே வெற்றிகரமாகச் செய்து முடித்திருக்கிறார்கள். 2009ம் ஆண்டு நோயுற்ற குழந்தைகளுக்குத் (Sick Kids Foundation) தேவையான நிதி சேகரிக்கும் நோக்கத்தோடும், 2010ம் ஆண்டு புற்று நோயால் (Canadian Cancer Society) பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் முகமாகவும் , 2011ம் ஆண்டுக் கான நடைபவனி எம்மினத்திற்கு உதவிக்கரம் நீட்டிய சர்வதேச மன்னிப்புச் சபைக்கு (Amnesty International) உதவுவதற்காகவும் பங்குபற்றி நிதி சேகரித்தமைக் குறிப்பிடத்தக்கது

ஸ்கார்பரோ தொம்சன் மெமோரியல் பூங்காவில் (Thomson Memorial Park) எதிர்வரும் செப்டம்பர் 24 இல் நடைபெற இருக்கும் நடைபவனி போதைப் பழக்கம் மற்றும் மனநலம் குன்றியோரின் மறுவாழ்வு உதவுவதற்கு மாத்திரமன்ஷறி அது தொடர்பான கற்கைநெறி, பயிற்சி, மற்றும் விழிப்புணர்வு பிரச்சாரக் கருத்தரங்குகளுக்கு வழங்கப்படும் என கனடியத் தமிழர் பேரவை அறிவித்திருப்பதுடன் அனைத்து தமிழ் மக்களையும் இந. நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றனர்.

புலம்பெயர்ந்த தமிழர்களின் இது போன்ற நிகழ்வுகள் மேலும் உந்துசக்தியாக உள்ளன. சமகாலத்தில் கனடிய தமிழர்களின் அரசியல் , வர்த்தக வளர்ச்சிப் போக்கானது கனடிய நீரோட்டத்தில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவது குறிப்பிடத்தக்கது.

# புதிய பத்தாண்டு சிறப்பு நுழைவுரிமை (சூப்பர் விசா) கனடாவில் அறிமுகம்!




பணிநிமித்தமாக, கனடாவிற்கு சென்று தங்கியுள்ளவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரின் நலனுக்காக கனடா அரசு "சூப்பர் விசா" (சிறப்பு நுழைவுரிமை)என்ற பெயரிலான புதிய விசாவை கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் அறிமுகப்படுத்தியது. முதற்கட்டமாக, 2 ஆண்டுகள் கால அவகாசம் கொண்டதாக இந்த விசா வழங்கப்பட்டு வந்தது. இருப்பினும் கனடிய நாட்டு மக்களின் கோரிக்கையை அடுத்து பெற்றோர் மற்றும் தாத்தா , பாட்டிமார்களுக்காக பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த சூப்பர் விசாவின் ஆயுட்காலம், 10 ஆண்டுகள் வரை நீட்டிக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதுமட்டுமல்லாது, இந்த விசாவை புதுப்பிக்கும் காலத்தில், 1 ஆண்டு வரை அவர்கள் கனடா நாட்டில் தங்க எவ்வித தடையுமுமில்லை. இந்த விசாவிற்கு விண்ணப்பித்து, 8 வார கால அளவில் சூப்பர் விசாவை பெறக்கூடிய வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஜசோன் கென்னி தெரிவித்துள்ளார். கடந்த இரு வருடங்களில் மட்டும் ஆண்டுக்கு 40,000 விண்ணப்பங்கள் பெற்றோர்களிடமிருந்து பெறப்பட்டு வந்ததாலேயே இந்த விசா அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் கனடிய குடிவரவுத்துறையின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது. –இ குருவி செய்திகள்.

HOME SECURITY
ALARM
Say Goodbye to the Contract !
Existing Alarm Monitoring $11.99/per month
One time programming & Activation $99.99
Residential Alarm Monitoring $17.99/per month
One time programming & Activation $99.99
NOBLE REIGN
SECURITY & COMMUNICATIONS
416-826-5831
106-5215 Finch Ave East,
Scarborough, ON M1S 0C2.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# எச்சரிக்கை! புதுவிதமான “கடனட்டை” (Credit Card) மோசடி!

“விசா காட்”, “மாஸ்ரர் காட்” வைத்திருக்கும் வாடிக்கையாளர்களே! புதுவிதமான கடன் அட்டை மோசடியில் சிலர் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களிடம் ஏமார்ந்து விடாது எச்சரி க்கையாக இருங் கள் என றோயல் வங்கி அறிவித்துள்ளது.

உங்களது கடன் அட்டைகளில் உள்ள விபரங்கள் அனைத்தையும் எப்படியோ தெரிந்து வைத்துக் கொண்டுள்ள மோசடிக்காரார்கள் அதன் பின்புறத்திலுள்ள இலக்கங்களில் இறுதி 3 எண்களா ன பாதுகாப்பு இலக்கங்களையும் அறிந்து கொண்டால் தான் உங்கள் கடன் அட்டை மூலம் அவ ர்கள் பணமோசடி செய்ய முடியும். தொலை பேசி மூலம் உங் கள் பெயர் விபரங்களையும், உங்க ள் கடன் அட்டையின் பின்புறத்திலுள்ள இந்த இலக்கங் களையும் சந்தைப் படுத்தும் கொம்பனிகளிடம் வழங்குவதன் மூலம்அவர்கள் பொருட்க ளை கொள்வனவு செய்ய முடியும்.

இந்த இலக்கங்களை உங்களிடம் இருந்து பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் தந்திரமான முறை யினை மேற்கொண்டு வருகின்றனர். உங்களை தொலை பேசி மூலம் அழைத்து ஏதாவது ஒரு பெயரைக் கூறி தன்னை அறிமுகம் செய்து கொண்டு “விசா” காட் மோசடி விசாரணைப் பிரிவில் இருந்து அழைக்கிறேன். எனது அடையாள எண் 12460. உங்களது “விசா காட்” டினைப் பயன் படுத்தி (விசா காட்டினை வழங்கிய வங்கியின் பெயரையும் குறிப்பிட்டு) பொருள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது. அதில் எமக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது. அதுபற்றி தெரிந்து கொள்வதற்கா கவே அழைக்கின்றோம். நீங்கள் அரிசோனாவி லுள்ள ஒரு சந்தைப்படுத்தும் கொம்பனியில் இருந்து உங்களது “விசா காட்” டினைப் பயன்படுத்தி 497. 99டொலருக்கு “ரெலி மார்க்கெட்டிங்” பிரச் சார தொல்லையை தவிர்ப்பதற்கான கருவி ஒன்றினைகொள்வனவு செய்தீர்களா? எனக் கேட்பார்கள்.

நீங்கள் இல்லையெனப் பதில் அளித்தால், அண்மைக் காலமாக சிலர் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்டு வருகின்றனர். 297.00 முதல் 497.00 டொலர்கள் வரை கொள்வனவு செய்து வருகின்றனர். அவர்கள் உங்களது விசா காட்டினைப் பயன்படுத்தி 497.00 டொலர்களுக்கு கொள்வனவு செய்துள்ளனர். அத்தொகையினை நாம் உங்களது அடுத்த மாத வங்கி அறிக்கைக்கு முன்னர் உங்களுக்கு திரும்பத் தருவோம். உங்களது முகவரி இது தானே எனக் கேட்டு முகவரியை கூறி அது சரி தானா எனக்கேட்பார்கள்.


நீங்கள் ஆம் என்று சொன்னதும் நீங்கள் தான் இந்தக் கடன் அட்டையின் உரிமையாளர் என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். உங்கள் கடன் அட்டையின் பின்புறத்திலுள்ள இலக்கங்களின் இறுதி மூன்று எண்களையும் கூறுவீர்களா எனக் கேட்பார். அதனை உங்களிடம் இருந்து பெற்றுக் கொண்டதும்நன்றி, நாங்கள் விசாரணையை தொடர்வோம். நீங்கள் வேறு ஏதாவது கேள்வி கேட்க விரும்புகிறீர்களா?நீங்கள் ஏதாவது கேள்வி கேட்க விரும்பினால் உங்களது கட ன் அட்டையின் பின்புறத்திலுள்ள தொலைபேசி இலக்கத்தில் தொடர்பு கொண்டு கேட்கலாம் எனக் கூறுவார். அப்போது இந்த அடையாள இலக்கங்களைக் கூறுங்கள் என 6 எண்களைக் கொண்ட இலக்கமொன்றினையும் தருவார்.

உங்களிடம் இருந்து அந்த 3 எண்களையும் பெற்றுக் கொண்ட 15 நிமிட நேரத்தினுள் அவர்கள் உங்கள் கடன் அட்டையினைப் பயன்படுத்தி பொருட்களை கொள்வனவு செய்து விடுவார்கள். எனவே எச்சரிக்கையாக இருங்கள். யாராவது இவ்வாறு உங்களுடன் தொலை பேசியில் தொடர்பு கொண்டால் அவர்களுக்கு எதுவித விபரங்களையும் வழங்காது, கடன் அட்டையின் பின்புறத்திலு ள்ள தொலை பேசி இலக்கத்தில் நான் தொடர்பு கொள்கிறேன் எனக் கூறி தொலைபேசி தொடர்பினை துண்டித்து விடுங்கள்.இந்த மோசடி பற்றி உங்கள் நண்பர்களிடமும் எடுத்துக் கூறி எச்சரிக்கையாக இருக்கச் சொல்லுங்கள்.

# அகதிகளுக்கான சுகாதாரத் திட்டங்களை நிறுத்தினால் பலர் மரணமடைய நேரும் ஒன்றாரியோ அரசுக்கு தாதிகள் எச்சரிக்கை

கனடாவில் அகதி உரிமை கோரி காத்துக் கொண்டிருக்கும் மக்களுக்கான சுகாதாரத் திட்டங்களை நிறுத்தும் முடிவினை ஒன்றாரியோ அரசு கைவிட வேண்டும் என தாதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். இது குறித்த விரிவான கடிதமொன்றும் முதல்வர் டால்டன் மக்கென்றிக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பொதுமக்களின் ஆரோக்கியத்திற்கு அச்சுறுத்தும் நிலையில் நோய்வாய்ப்பட்டுள்ள அகதிகளுக்கு மட்டுமே சிகிச்சையளிக்க வேண்டும். பிற அகதி மக்களுக்கு தற்போது ஒன்றாரியோ அரசினால் வழங்கப்பட்டுள்ள சுகாதாரத் திட்டங்கள் எதிர்வரும் ஜூலை முதல் நிறுத்தப்படும் என கடந்த மாதம் அரசு அறிவிப்பொன்றினை வெளியிட்டிருந்தது.




இதற்கு கடுமையான ஆட்சேபம் தெரிவித்துள்ள தாதிகள் குழு தற்போதைய சூழ்நிலையில் அகதி உரிமை கோரியுள்ள மக்கள் பலர் கடும் இன்னல்களை அனுபவித்து வருவதாகவும் இவர்களுக்கான சுகாதாரத் திட்டங்கள் நிறுத்தப்படும் பட்சத்தில் பலர் உயிரிழக்கும் சூழ்நிலையே உருவாகும் எனவும் அரசை எச்சரித்துள்ளது.

இதற்காக தாதிகள் சங்கம் மூலமாக கடிதங்கள் அனுப்பும் விழிப்புணர்வு நிகழ்வு ஒன்றிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்படி ஒன்றாரியோ தாதிகள் சங்கத்தின் 33,000 உறுப்பினர்களும் பிரதமர் ஹார்ப்பருக்கும் , குடிவரவு அமைச்சர் ஜோசன் கென்னிக்கும் அரசின் இந்த முடிவிற்கு தங்கள் எதிர்ப்பினைக் காட்டும் விதத்தில் கடிதமெழுத திட்டமிட்டுள்ளனர்.

# தன் பாலினச் சேர்க்கையாளர்களுக்கென தனியான பாடசாலைகள் தேவையில்லை

## கத்தோலிக்க மத குருக்களுக்கு எதிர்ப்பாக முதல்வர் டால்டன் மக்கென்றி வாதம்



தன் பாலினச் சேர்க்கையாளர்களை பொதுவான பாடசாலைகளில் அனுமதிக்கக் கூடாது அவர்களுக்கென தனியான பாடசாலைகள் உருவாக்கப்பட வேண்டும் என்ற கத்தோலிக்க போதனையாளர்களின் கூற்றிற்கு ஒன்ரோறியோ முதல்வர் டால்டன் மக்கென்றி எதிர்ப்பினை தெரிவித்துள்ளார்.

அனைவரையும் அரவணைத்து செல்ல வேண்டும். அன்பு காட்ட வேண்டும் என்பதே நாம் வீடுகளில் குழந்தைகளுக்கு கற்றுத் தரும் போதனையாக இருக்கும் போது ஓரினச் சேர்கையாளர்கள் என்ற பெயரினை ஏற்றுக் கொள்ள கத்தோலிக்க பேராயர்கள் பாகுபாடு காட்டுவதனை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாது எனவும் முதல்வர் கூறியுள்ளார்.

முதல்வர் டால்டன் மக்கென்றி ரோமன் கத்தோலிக்க சமயத்தைச் சேர்ந்தவர் என்பதோடு அவரின் மனைவி இது போன்ற தனியான போதனை சாலைகளில் பணிபுரிந்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. கத்தோலிக்க மத குருமார்களின் பொறுப்புக்களும் தனக்கிருக்கும் பொறுப்புக்களும் வேறுபட்டவை என்பதை சுட்டிக் காட்டியுள்ள மக்கென்றி அனைத்து பெற்றோர்களுக்கும் பதில் கூறக் கூடிய பொறுப்பில் தான் இருப்பதால் யாரிடமும் பாகுபாடு காட்ட விரும்பவில்லை எனவும் விளக்கியுள்ளார். இதே கருத்தையே ஒன்ரோறியோ என்.டி.பி கட்சித் தலைவர் அண்ட்ரியா ஹோர்வேத்தும் வெளிப்படுத்தியுள்ளார்.



# கனடாவின் புதிய மக்கள் தொகை கணக்கீடு சொல்வது என்ன?

2011 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகை கணக்கீடுகள் நிறைவடைந்து நேற்று வெளியிடப்பட்டுள்ளன. புதிய கணக்கெடுப்பின்படி நாட்டில் உள்ள மூத்த குடிமக்களின் ( வயது வரம்பு 65 மற்றும் அதற்கு மேல் ) எண்ணிக்கை 5 மில்லியனைத் தொட்டுள்ளது. இதுவரை கனடாவில் எடுக்கப்பட்ட கணக்கீடுகளில் தற்போது உள்ள மூத்தவர்களின் எண்ணிக்கையே மிக அதிகமானதாகும்.

ஹார்ப்பர் அரசாங்கத்தின் முதியோர் பாதுகாப்பிற்கான வயது வரம்பு 65 இலிருந்து 67 ஆக உயர்த்தப்பட்டுள்ள போதிலும் கூட தற்போதைய நிலவரப்படி நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 15சதவீதத்தினர் முதியோர் பாதுகாப்பு திட்டங்களுக்குத் தகுதி பெறுவர் என்பது உறுதியாகியுள்ளது.

அதே நேரத்தில் 15-64 வயது வரையுள்ள பணி புரியும் மக்களின் வீதம் கடந்த ஆண்டு 5.7 சதவீதம்மட்டுமே அதிகமாகியுள்ளது. இந்த எண்ணிக்கை நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 42 சதவீதத்திற்கு சமமானதாகும். 14 வயதிற்கு கீழுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை 0.5 விசதவீதம் மட்டுமே உயர்ந்துள்ளது.2006 முதல் 2011 வரையிலான காலகட்டங்களில் 4 வயதிற்கும் குறைவான குழந்தைகளின் எண்ணிக்கை11 சதவீதம் உயர்ந்துள்ளது முக்கியமான அம்சங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

தற்போதைய குடிமக்கள் கணக்கீடுகளின் படி மூத்த குடிமக்கள் தகுதியினை அடையும் தருவாயில் உள்ள 60-64 வயது வரம்பில் உள்ளோரும் 100 வயதைத் தாண்டியவர்களின் எண்ணிக்கையும் கணிசமாக உயர்ந்துள்ளது. 5,825 மக்கள் 100 வயதைத் தாண்டி வாழ்ந்து வருகின்றனர் என்பதும் இவர்களின் பெண்களின் சதவீதம்ஆண்களுடன் ஒப்பிடும் போது ஐந்து மடங்கு அதிகம் எனபதும் குறிப்பிடத்தக்கதாகும்.

Century 21
Regal Realty Inc., Brokerage*
The Local Experts
4030 Sheppard Ave. E Scarborough, ON M1S 1S6
1291 Queen St, West Toronto, ON M6K 1L6



Jeyan Inpanayagam
Sales Represntative
Direct: 416-877-3300
Tel: 416-291-0929
Fax:416-291-0984
Email: jeyan_i@hotmail.com
www.century21regal.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கியூபெக் வீட்டை 11 முறை தோமஸ் மல்கெயர் மீள்அடமானம் வைத்துள்ளது ஏன்?




மொன்றியலின் மேற்குப் பகுதியில் உள்ள தங்கள் வீட்டை தொடர்ந்தும் 11 வது முறையாக புதிய ஜனநாயகக் கட்சித் தலைவரான தோமஸ் மல்கெயரும், அவரது மனைவியும் மீள் அடமானம்செய்துள்ளனர் என தெரியவந்துள்ளது. 1980 களில் இத்தம்பதிகள் வாழ்ந்த வீடு தொடர்ந்தும் மீள் அடமானம் வைக்கப்படுவது எதனால் என மல்கெயாரின் அலுவலகத்திடம் ஊடகங்கள் விபரம் கேட்ட போது அது" தனிப்பட்ட சமாச்சாரம்" எனக் கூறி விளக்கமளிக்க மறுக்கிறது மல்கெயாரின் அலுவலகம்.

இரு வாகனத் தரிப்பிடங்களைக் கொண்ட மல்கெயாரின் பீகோன்ஸ்பீல்ட் வீட்டினை பல முறைகள் மீள் அடமானம் வைக்க வேண்டிய அவசியம் என்ன என பல்வேறு கேள்விகள் எழுப்பட்டுள்ள நிலையில் முதன்முறை கூ58,000 அடமானத்திற்கு வைக்கப்பட்ட இந்த வீடு தற்போது கூ300,000 க்கு மீள் அடமானமாக வைக்கப்பட்டுள்ளது என்பதும் நில ஆவணங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. தங்கள் வீட்டிற்கான மதிப்பினை உயர்த்திக் கொள்ள மல்கெயார் தம்பதிகள் செய்யும் தந்திரமோ இது எனவும் பலர் யூகிக்கத் தொடங்கியுள்ளனர்.

வீட்டின் பொருளாதார நிலைமை காரணமாக தான் அவர்கள் தங்கள் வீட்டினை மீள் அடைமானம் வைத்தனர் என இன்னொரு சாரார் கருத்து தெரிவித்துள்ளனர். எனவே வீட்டின் பொருளாதாரத்தை முகாமைத்துவம் செய்ய முடியாத மல்கெயர் எவ்வாறு நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவார் என அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

என்.டி.பி கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்கும் முன்னர் அரசு சட்டத்தரணி , கியூபெக் மாகாண சட்டசபையின் அமைச்சர் உள்ளிட்ட முக்கிய பொறுப்புக்களை வகித்தவர் தோமஸ் மல்கெயர். இவரின் மனைவி காத்ரின் பின்ஹாஸ் மொன்றியல் பகுதியில் மனநல மருத்துவராக பணியாற்றி வருகிறார். இவர்களின் பிள்ளைகள் இருவரில் ஒருவர் போலிஸ் அதிகாரியாகவும், மற்றுமொருவர் பொறியாளராகவும் பணி புரிந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## ஸ்டீபன் ஹார்ப்பர் நிர்வாண நிலையில் இருப்பதைப் போன்ற ஓவியம் வெளியானதால் சர்ச்சை



பிரதமர் ஸ்டீபன் ஹார்ப்பர் நிர்வாண நிலையில் ஓய்வெடுத்துக் கொண்டு இருப்பதைப் போன்ற புதிய ஓவியம் ஒன்று கிங்ஸ்டன் கலை மன்றத்தின் வருடாந்திர கலைக் கண்காட்சியில் இடம் பெற்றுள்ளது பலரையும் ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளதுடன் இது போன்ற ஓவியத்தினை வெளியிட்டது சரியானது தானா என்ற சர்ச்சைகளும் எழுந்துள்ளன.

ஸ்டீபன் ஹார்ப்பர் நிர்வாண நிலையில் ஓய்வெடுக்கும் நிலையில் தீட்டப்பட்டுள்ள இந்த ஓவியத்தில் அவரைச் சுற்றிலும் சிலர் நிற்பது போன்றும் , நாய் ஒன்று அவர் காலடியில் இளைப்பாறிக் கொண்டிருப்பது போலவும் காட்டப்பட்டுள்ளது. மார்கரெட் சுதர்லேண்ட் என்ற ஓவியரின் கைவண்ணத்தில் உருவான இந்த ஓவியம் பகிரங்கமாக கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ளது கண்டு பலர் ஆச்சர்யத்துடன் புருவங்களை உயர்த்தியுள்ளனர்.

தற்போது இந்த ஓவியம் கூ5,000 க்கு விற்பனையாகியுள்ளதாகவும் தெரிகிறது. இது ஒருபுறமிருக்க ஓவியம் குறித்து மார்கரெட் சுதர்லேண்ட் கூறிய போது ஓவியம் அதிக விலைக்கு விற்பனையானது ஹார்ப்பரை வரைந்ததால் அல்ல என்றும் நிர்வாண நிலையில் இருப்பதே ஓவியத்தின் சிறப்பு என்பதையும் குறிப்பிட்டுள்ளார். எமது செய்திகளை பிரதி செய்பவர்கள் தயது செய்து எமது இணையத்தள முகவரியான நமரசரஎை.உழஅ குறிப்பிடுமாறு நட்புரிமையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

## கேஷர்ப்ரூக் பிரபல துணிக்கடைகளில் விற்க வைக்கப்பட்டிருந்த ஜீன்ஸ் கால்சட்டைகளில் ரத்தம் நிரம்பிய ஊசிகள் இருந்ததால் பீதி குற்றவாளியைத் தேடுகிறது காவல்துறை

ஒளிமயமான விளக்குகளைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ள செல்லேர்ஸ் (Zellers) பல்பொருள் அங்காடியின் ஆண்கள் பிரிவில் நேற்று ஜீன்ஸ் வாங்கச் சென்றுள்ளார் கியுபெக்கின் ஷேர்ப்ரூக்(Sherbrooke) பகுதியைச் சேர்ந்த பட்ரிக் பியுடெட். தன்னுடைய அளவிற்கான ஜீன்ஸ் கால்சட்டைகள் இரண்டை தேர்ந்தெடுத்த பின்னர் அவற்றை இடது கையில் பிடித்துக் கொண்டு உடை மாற்றும் அறைக்குச் சென்றுள்ளார். அப்போது திடிரென உள்ளங்கையில் லேசான வலி ஏற்பட்டுள்ளது. – இ குருவி செய்திகள்

சந்தேகத்துடன் கையை பார்த்த பட்றிக் அதிர்ந்தே போய் விட்டார். கையிலிருந்து ரத்தம் கொட்ட ஆரம்பித்துள்ளது. உடனடியாக பட்ரிக்கும் அவரின் காதலியும் விடயத்தை கடைக்காரரிடம் தெரிவித்துள்ளனர். அதன் பின்னர் தாதி ஒருவரின் உதவியுடன் இரத்தம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இது எதனால் ஏற்பட்டது என சோதித்துப் பார்த்த போது ஜீன்ஸ் கால்சட்டையின் இரு புறங்களிலும் உள்ள பைகளில் ரத்தம் நிரப்பிய ஊசிகள் இருந்த விடயம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. காவல்துறையினர் இது குறித்து விசாரித்து சோதனை நடத்திய போது அதே பகுதியில் உள்ள வேறு சில கடைகளிலும் ஜீன்ஸ் கால்சட்டைகளுக்குள் ரத்தம் நிரம்பிய ஊசி இருந்தது தெரிய வந்துள்ளது

இந்த வேலைகளைச் செய்த விஷமி நபர்களை காவல்துறையினர் தேடி வருகின்றனர். இந்த வருடம் ஜனவரி மாதத்தில் தொடங்கி இது வரையிலும் 23 ஊசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. குற்றவாளிகளைப் பற்றிய துப்புக் கொடுப்பவர்களுக்கு சன்மானம் தருவதாக காவல்துறை அறிவித்த பின்னரும் கூட எந்த பயனும் ஏற்படவில்லை.




## வரி மாறுதல்களை உடனடியாக அமுல்படுத்த முடியாது ஒன்றாரியோ நிதியமைச்சர் திட்டவட்டம்

ஒன்றாரியோவில் கடந்த மார்ச் மாதம் லிபரல் கட்சியினரால் சமர்பிக்கப்பட்டு பெரும் சர்ச்சைக்குள்ளான அரசின் வரவு செலவுத் திட்டத்தில் என்.டி.பி கட்சியினர் விரும்புவது போல் உடனடியாக வரி மாறுதல்களை நடைமுறைக்கு கொண்டு வர முடியாது என நிதியமைச்சர் ட்வைட் டன்கன் உறுதிபடக் கூறியுள்ளார்.

மார்ச் மாதம் லிபரல் கட்சியினரால் முன் வைக்கப்பட்ட வரவு செலவுத் திட்டத்திற்கு எதிர்க்கட்சிகளான என்.டி.பி.யும் , புரோக்ரேச்சிவ் கொன்சவேற்றிவ் கட்சியும் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததால் டால்டன் மக்கென்றி தலைமையிலான அரசு கவிழும் நிலை உண்டாகியது. இதனைத் தடுத்து என்.டி.பிகட்சியினரின் ஆதரவைப் பெற முயன்ற லிபரல் கட்சி வேறு வழியின்றி என்.டி.பியின் கோரிக்கைகள் சிலவற்றை ஏற்றுக் கொள்வதாக அறிவித்தது.

பொதுத்துறை நிறுவனங்களுக்கு வரியை ரத்து செய்யும் அரசின் திட்டத்தை கைவிட வேண்டும் என்பதும் அதிக வருமானமீட்டுவோருக்கு வரி உயர்வினை அமுல்படுத்த வேண்டும் என்பதும் என்.டி.பி கட்சியின் முக்கிய கோரிக்கைகளில் சில. இந்த கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதால் உடனடியாக இவற்றை நிதி சட்ட மூலத்தில் சேர்த்து எதிர்வரும் துரடல 1 இல் இவற்றை நடைமுறைப்படுத்த வேண்டுமென என்.டி.பி கட்சித் தலைவர் அண்ட்ரியா ஹோர்வேத் கேட்டுக் கொண்டுள்ளார்.

இதனிடையே 350–பக்கங்கள் கொண்ட அரசின் வரவு செலவுத் திட்டத்தில் தாங்கள் விரும்பியவற்றை எல்லாம் உடனடியாக சேர்க்க வேண்டும் என அண்ட்ரியா ஹோர்வேத் நினைப்பது பொறுப்பற்ற செயல் என்றும் உடனடியாக வரி உயர்வினை நடைமுறைக்கு கொண்டு வருவது இயலாத காரியம் எனவும் நிதியமைச்சர் ட்வைட் டன்க்கன் பதிலளித்துள்ளார்.

## கனடா பிரபஞ்ச அழகி போட்டி இறுதிச் சுற்றில் ஜென்னா தோல்வி

றொறொண்ரோவில் நடைபெற்ற கனடா பிரபஞ்ச அழகி போட்டியின் இறுதிச் சுற்றில் கலந்து கொண்ட பால் மாற்று சத்திரசிகிச்சை செய்து கொண்ட ஜென்னா டெலிகோவா கனடாவின் பிரபஞ்ச அழகியாக தெரிவு செய்யப்படவில்லை. இறுதிப்போட்டியில் ஜென்னாவுடன் சேர்த்து மொத்தம் 12 பேர் போட்டியாளர்களாக கலந்து கொண்டனர். இவர்களில் ஜென்னா உள்ளிட்ட 5 பேர் இறுதிச் சுற்றுக்கு முன்னேறினர். இறுதியாக வன்குவேரைச் சேர்ந்த 26 வயதாகும் சாகர் பினியாஷ் கனடாவின் பிரபஞ்ச அழகியாக அறிவிக்கப்பட்டார்.

கனடாவின் பிரபஞ்ச அழகியாக முடிசூட்டப்பட்டுள்ள சாகர் பினியாஷ் எதிர்வரும் டிசம்பரில் நடைபெறவுள்ள சர்வதேச பிரபஞ்ச அழகி போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெற்றுள்ளார். இதனிடையே அனைவராலும் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட ஜென்னா டெலிகோவா கனடாவின் பிரபஞ்ச அழகியாக தெரிவு செய்யப்படவில்லை என்பது அவருக்கு பெரும் ஏமாற்றத்தை உண்டாக்கியுள்ளது

இந்த போட்டி முடிவுகளுக்காக ஜென்னா வருத்தப்படக் கூடாது என்றும் தனக்கான உரிமையை நிலைநாட்டும் போட்டியில் ஜென்னா வென்றதை விட கனடாவின் பிரபஞ்ச அழகியாக தெரிந்தேடுக்கப்படுவது ஒன்றும் பெரிய வெற்றியல்ல என்ன அவரின் சட்டத்தரணி க்ளோரியா ஆல்ரெட் போட்டி முடிந்த பின்னர் ஊடகங்களை சந்தித்த போது கூறினார்.

## அரிய வெண்ணிற மான் லண்டன் ஒன்றாரியோவில் கண்டுபிடிப்பு



கடந்த 26 ஆம் திகதி ஒன்றாரியோவின் லண்டன் பகுதியைச் சேர்ந்த டேவிட் பேர்ட் என்பரின் தோட்டத்தில் அழகிய வெண்ணிற ஆட்டுக் குட்டிகள் இரண்டு செல்வதைப் பார்த்துள்ளார். தவறுதலாக தொலைந்த ஆடுகளோ என நினைத்து அருகில் சென்று பார்த்த போது தான் அவை ஆடுகள் அல்ல என்பதும் அழகிய அரிய வகை வெண்ணிற மான் குட்டிகள் என்பதும் தெரிய வந்தது.

தூய்மையான வெண்ணிறத்தில் காணப்பட்ட இந்த மான்கள் தோட்டத்தில் 10 நிமிடங்கள் துள்ளிக் குதித்து விளையாடியுள்ளன. அதுமட்டுமன்றி இந்த வகை மான்கள் அதிர்ஷ்டத்திற்கான ஒரு அறிகுறியாகவும் கருதப்படுவதால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கிறார் தோட்டத்தின் உரிமையாளரான டேவிட் பேர்ட.

பத்தாயிரத்தில் ஒரு மான் குட்டியே அபூர்வமாக இது போன்று தூய வெண் நிறத்தில் இருக்கும் என காட்டு விலங்கின அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் இந்த மான்கள் எங்கிருந்து வந்தன என்பதை யாராலும் கண்டுபிடிக்க முடியவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறொண்ரோ பொதிப் பைக்கான 5சத வரி சட்டத்துக்குப் புறம்பானது நியாயத்துக்கான ஆலோசனை அமைப்பு!



குழமை பைகளுக்கான (plastic bag) 5 சத வரி விதிப்பு சட்டத்துக்குப் புறம்பானது என வலது சாரி வரி சட்ட ஆலோசனை அமைப்பொன்று தெரிவித்திருக்கின்றது.

றொறொண்ரோ வரி செலுத்துவோர் கூட்டமைப்பு வரி தொடர்பாக முறைப்பாடு ஒன்றை மத்திய போட்டி செயலகத்தில் செய்துள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது. இதன் தலைவர் மத்தியூ மக் குயர் (Matthew McGuire) கூறுகையில், நாங்கள் குழமை பைகளுக்கு வரி விதிக்கக் கூடாது என்று சொல்லவில்லை ஆனால் நிலையான விலை நிர்ணயம் இருக்கக் கூடாது என்பதை வலியுறுத்துகின்றோம் எனத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சில பைகளின் விலை மற்றையவற்றை விட அதிகமாக இருக்கின்றன. அதே நேரத்தில் சில்லறை வியாபாரிகள் அதனை இலவசமாக வழங்க விரும்பின், ஏன் அதனைச் செய்யக் கூடாது எனவும் அவர் கேள்வி எழுப்பினார். றொறொண்ரோ அறிக்கையின் படி, ஆண்டுக்கு $5.4 மில்லியன் இதன் மூலம் கிடைப்பதாக தெரிவிக்கின்ற போதிலும், உண்மையில் இது கூ. 10 மில்லியன் தொடக்கம் கூ. 20 மில்லியன் வரை இருக்கும் என மக் குயர் தெரிவித்தார்.

றொப் போர்ட்டின் நிர்வாகக் குழு குழமைப் பைகளுக்கான வரியை விலக்குவதற்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்ற போதிலும், அதற்கு மிச்சலி பேராட்டிநேற்றி (Michelle Berardinett) போன்ற நகரச் சபைத் தலைவர்களிடமிருந்து எதிர்ப்பு கிளப்பி இருக்கின்றது. அவர் இப் பணத்தை நகரத்தின் மரங்களின் பராமரிப்புக்குப் பயன்படுத்தலாம் என தெரிவிக்கின்றார்.

குழமைப் பைகளுக்கான வரியை 2009 ஆண்டு மாநகர சபை நிர்வாகம் விதித்தமைக் குறிப்பிடத்தக்கது.


# மாணவர்கள் கொந்தளிப்பு நிலை
## மொன்றியல் நகர விழாக்களை பாதிக்குமா?



கடந்த 100 நாட்களுக்கும் மேலாக மொன்றியல் நகரில் நடை பெற்று வரும் மாணவர்களின் கட்டுக்கடங்காத ஆர்ப்பாட்டங்களினால் பெரும் கொந்தளிப்பு நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் கிராண்ட் பிரிக்ஸ் (Grand Prix ) மற்றும் இதர நகர விழாக்களின் அமைப்பாளர்கள் இந்த வருடம் நடைபெறும் விழாக்களில் கூட்டம் இருக்காதோ என எதிர்பார்க்கின்றனர். அதே நேரத்தில் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களையும், கலவரங்களையும் முடிவுக்குக் கொண்டு வருவது எப்படி எனத் தெரியாமல் பலகலைக்கழகங்களும் பேராசிரியர்களும் திணறி வருகின்றனர்.

தற்போதைய நிலவரங் களின்படி மொன்றியலில் பேரழிவு நிலை ஏற்பட்டுள்ளதாகவும், இதனை செம்மைப்படுத்த இன்னும் ஆறேழு ஆண்டுகள் ஆகலாம் என்பதால் நாட்டின் வேறு பகுதிகளில் பணிபுரியும் தகுதியுடைய பேராசிரியர்கள் அனைவரும் மொன்றியல் நிலைமை சீரடையும் வரை காத்திருக்காமல் வேறு இடங்களுக்குச் சென்று பணியாற்றுவதே சிறந்தது என கல்வியாளர்கள் சிலர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

இதனிடையே மொன்றியலில் உள்ள கன்கார்டியா உள்ளிட்ட பல பலகலைக் கழகங்களில் 1,609 க்கும் மேற்பட்ட மாணவர்களின் விண்ணப்பங்கள் தேங்கிக் கிடப்பதாகவும் தொடர்ந்தும் மாணவர்கள் கலவரங்களில் ஈடுபட்டு வருவதும் பல ஆயிரக்கணக்கான மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதும் பலகலைக்கழகங்களின் எதிர்காலத்தையே பெரும் கேள்விக்குறியாக்கி விட்டதாக அதன் செய்தித் தொடர்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.



# மாநகர முதல்வர் றொப் போர்ட் அலுவலக பணிகளில் சரியாக கவனம் செலுத்தவில்லை என்பது அம்பலம்

இந்த வருடம் மாநகர முதல்வர் றொப் போர்ட் அலுவலக பணிகளில் சரியாக கவனம் செலுத்தவில்லை என்பது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் சமீபத்தில் வெளியான ஆவணங்களின் மூலம் தெரிய வந்துள்ளது. கடந்த வருடம் செய்த அலுவலக பணிகளில் பாதியளவைக் கூட இந்த வருடம் செய்யத் தவறியுள்ளார.

ஏற்கனவே எப்போதும் விடுப்பில் இருக்கும் மேயர் என எதிர்கட்சியினர் தொடர்ந்து குற்றம்சாட்டி வரும் நிலையில் வெளியாகியுள்ள இந்த முடிவுகளால் பெரும் சர்ச்சை உண்டாகியுள்ளது. றொப் போர்ட்டுக்கு முன்னர் மேயர் பதவி வகித்த டேவிட் மில்லேர் தினமும் தன் அலுவலகப் பணிகளை பகிரங்கமாக அறிவித்த போதும் கூட றொப் போர்ட் இது போன்று செய்யத் தவறியதால் மேயரின் தின அலுவல்கள்குறித்து அறிந்து கொள்ள தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் ஸ்டார் ஊடகம் முயற்சித்துள்ளது.

இந்த வருடம் ஜனவரி 2012 இல் 11 சந்திப்புக்களில் மட்டுமே போர்ட் பங்கு கொண்டுள்ளார். இது கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மூன்றில் ஒரு மடங்கு என்பதும் பொதுமக்களை சந்திப்பதை தவிர்த்துவந்துள்ளார் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுக்கள் மேயர் மீது சுமத்தப்பட்டுள்ளன.

# நண்பரை வேவு பார்த்த குற்றத்தை ஒப்புக்கொண்டார் ரவி

ருட்ஜெர்ஸ் பல்கலைக்கழகத்தின் ( Rutgers University ) முன்னாள் மாணவர் ரவி. இந்தியாவில் பிறந்தவர். தன்னுடைய அறையில் தங்கியிருந்த நண்பர் ஒருவர் மற்றொரு ஆனுக்கு முத்தம் கொடுத்த காட்சியை வெப் கேமரா மூலம் படம் பிடித்ததாகவும் அவரை உளவு பார்த்ததாகவும் ரவி மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்த சம்பவம் நடைபெற்று சில தினங்களுக்குப் பின்னர் ரவியால் உளவு பார்க்கப்பட்ட நண்பர் தற்கொலை செய்து இறந்து விட்டதால் பிரச்சினை விஸ்வரூபம் எடுத்தது.

நியூ ப்ருன்ஸ்விக்கில் (New Brunswick) நடைபெற்று வரும் இந்த வழக்கில் இதுவரை தன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்காக மன்னிப்புக் கேட்க மறுத்து வந்த ரவி வெப் கேமரா மூலம் படம் பிடித்து நண்பரை வேவு பார்த்ததை நேற்று முந்தினம் ஒப்புக் கொண்டுள்ளதுடன் அதற்காக பகிரங்கமாக வருத்தத்தையும் தெரிவித்துள்ளார். இந்த குற்றத்திற்கான தண்டனையை ரவி அனுபவிக்க வேண்டியதில்லை என்ற போதிலும் கூட இதற்காக ஒரு மாதம் சிறை தண்டனையை அனுபவிக்கப் போவதாகவும் அவர் அறிவித்துள்ளார்.

சிறுபிள்ளைத் தனமாகவும், முட்டாள் தனமாகவும் தன் அறையில் தங்கியிருந்த நண்பரை வேவு பார்த்த சம்பவங்களுக்கு முழுப் பொறுப்பினையும் தான் ஏற்றுக் கொள்வதாகவும் இதனால் பாதிக்கப்பட்டோர் யாராக இருப்பினும் அவர்களிடம் மனம் திருந்திய மன்னிப்புக் கோருவதாகவும் தனது சட்டத்தரணி மூலம் வெளியிட்ட அறிக்கையில் ரவி கூறியுள்ளார். இதனிடையே ரவியின் இந்தச் செயலுக்கு ஓரினச் சேர்க்கையாளர்கள் கடும் எதிர்ப்பினைத் தெரிவித்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "Be ready for Job"...

**Diploma Courses**
- Diploma in Office Administration
- Diploma in Accounting and payroll

**Engineering Software**
- Auto CAD
- SolidWorks
- Revit 2009
- CATIA
- MasterCAM X4
- Pro/Engineer
- MicroStation

**Multimedia & Graphic Design**
- Web Design
- Video Editing
- PhotoShop
- Illustrator
- QuarkXpress

**Pre-Exam Courses (For Licence)**
- Industrial & Construction Electrician
- CQE (Certified Quality Engineering),
- CQT(Certified quality Technician)

**Accounting Software**
- MS Office
- Quick Book / ACCPAC / Simply Accounting

**Special Certificate Programs**
- CNC Operation, Setup & Programing
- School students programs
  - Web Design & Flash
  - 3D Animation
  - Video Editng
  - Auto CAD

வளமானதோர் எதிர்காலத்தை உருவாக்கிக்கொள்ள தொழிற்கல்வி ஒன்றைக் கற்றுக் கொள்ளுங்கள்



EI, Maternity எடுத்தவர்கள் இவற்றை இலவசமாகக் கற்பதுடன் Ontario அரசு வழங்கும் $28,000 வரையிலான உதவிப் பணத்தையும் பெறத் தகுதியுடையவராகிறீர்கள்

**beta College**
of Business & Technology

Tel: **416.449-BETA**(2382)

PROUD MEMBER OF ONTARIO ASSOCIATION OF CAREER COLLEGES

**www.betacollege.ca**
info@betacollege.ca
1085 Bellamy Road, Unit 208, (Bellamy & Ellesmere)
Scarborough, ON, M1H 3C7



# இலகுவாக வீட்டு அடமானக்கடன்

பல வருட அனுபவத்துடன் சேவையாற்றும்,
Ceylingo Financial Group நிறுவனத்தை நாடுங்கள்...

AWARD OF EXCELLENCE DIAMOND 2003 - 2011

## SIVA RATNASINGAM
*Mortgage Agent*

TMP
THE MORTGAGE PRACTICE
Verico The Mortgage Practice
*License #: M08882133*
*Brokerage #: 11156*

Direct: **416.520.1214**
Office: **416.430.0111** Ex.1



Fax: **416.430.0222**, Email: **siva@ceylingo.com**, Web: **www.ceylingo.com**
Office: **2929 Lawrence Ave. E., Unit 203, Toronto, ON MIP 2S8**
Head Office: 2425 Matheson Blvd E., 8th Floor, Mississauga, ON L4W 5K4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்க்கம் நகரில் மரம் நாட்டு வைபவம்!




மார்க்கம் மாநகர சபை பிரிவிலுள்ள 7 ஆம் வட்டாராத்தில் கடந்த 20 ஆம் திகதி அப்பகுதி நகரச் சபைத் தலைவர் லோகன் கணபதி தலைமையில் மரநடுகை வைபவம் இடம்பெற்றது.

ஏழாம் வட்டாரத்தின் 14 வது அவெனியூவிலுள்ள "பிரெண்ட் ஒவ் றூஜ் பார்க்" கில் இடம்பெற் இந் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வி ராதிகா உட்பட பலர் இதில் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மர நடுகைக்காக ஒதுக்கப்பட்ட 53 சதுர கிலோ மீற்றர் பரப்பளவுள்ள "பிரெண்ட் ஒவ் றூஜ் பார்க்"இல் யாழ் வண்ணை ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் தேவஸ்த்தான உறுப்பினர்கள், யாழ் வைத்தீஸ்வராக்கல்லூரி பழைய மாணவர்கள் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மரநடுகைக்கு பொறுப்பாக இருக்கும் கெவின், அன்ட்றூ, எவலீன் ஆகியோரால் எவ்வாறு மரங்களை நடுவது என மரநடுகையில் பங்குபற்றியவர்களுக்கு செய்முறை விளக்கம் கொடுக்கப்பட்டது.

# இளைஞர்களில் எழுபதுகளில் தமிழ் சமூகம் தலைமையை ஒப்படைத்தது போல் மீண்டும் இளைஞர்கள் கையில் பொறுப்புக்களை ஒப்படையுங்கள்- நீதன் சான்



எழுபதுகள் எவ்வாறு எங்கள் சமூகம் இளைஞர்களிடம் தலைமைத்துவத்தை ஒப்படைத்தது போல் மீண்டும் அதனை இளைஞர்களின் கைகளில் தாருங்கள் என ஒன்றாரியோ புதிய ஜனநாயகக்கட்சியின் மாகாண தலைவர் நீதன் சான் கடந்த மே 19 குயின்ஸ்பார்க்கில் கனடா தமிழ் இளையோர் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மீள் எழுச்சிநாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசிகையில் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில், 2001 ஆம் ஆண்டு றொறொண்ரோ சண் பத்திரிக்கை தமிழீழ போராட்ட்த்தை கொச்சப்படுத்தி கட்டுரை எழுதிய போது அதற்கு எதிர்ப்பு தெரிவித்து அது போன்ற கட்டுரைகள் இதுவரை வெளியிடப்படப்படவில்லை. இதற்காக உழைத்தவர்கள் இளையோர்கள். கனடாவில் குழுவன்முறைகளை பரவியிருந்த போது அதற்கெதிரான அமைப்பை உருவாக்கி கட்டுப்படுத்தியவர்கள் எங்கள் இளைஞர்கள், கனடா நாட்டில் தமிழீழ விடுதலைப் புலிகளை தடைசெய்த போது தமிழ் விடுதலைச் சின்னங்களை எங்களது அடையாளமாக வெளியே துணிந்து கொண்டு வந்தவர்கள், 2008 ஆண்டு எம் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட அநீதிகளுக்கு எதிராக முதன்முதலில் உண்ணாநிலை போராட்டத்தை மேற்கொண்டவர்களும், முள்ளிவாய்கால் பேரவலத்தின் போதும் வீதிகள் தொடர்ந்தும் நின்றவர்கள் எங்கள் இளையோர்கள் தான் என்று குறிப்பிட்ட நீதன், அவர்களிடம் தலைமைத்துவத்தை கொடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

பல ஆண்டுகாலமாக எங்களுக்காக போராடியர்கள் இருக்கிறார்கள். அவர்கள் ஆலோசனை வழங்குங்கள், அறிவுரைகளை, வளங்களை வழங்குங்கள், பொருளாதார உதவியைச் செய்யுங்கள். ஆனால் தலைமைத்துவத்தை எழுபதுகளில் கொடுத்தது போல் மீண்டும் இளைஞர்களிடம் கொடுங்கள். எங்களிடமிருக்கக் கூடிய தலைமைத்துவப் போட்டிகளை விடுத்து எம்மின விடுதலைக்காக ஒன்றிணைந்து செயற்படுவோம் என நீதன் அனைவரையும் கேட்டுக் கொண்டார்.

# ஹொலிவூட் திரைப்படங்களிலிலும் காட்சிப்படுத்தப்படாத கொடூரங்கள் எம் மக்களுக்கு நிகழ்ந்துள்ளது!

மூன்று ஆண்டுகளுக்கு முன் எம்மக்களுக்கு தாயகத்தில் நிகழ்ந்த கொடுமைகள் ஹொலிவூட் திரைப்படங்களிலில் கூட இதுவரைக் காட்சிப்படுத்தப்படவில்லை என்று மார்க்கம் 7 ஆம் வட்டார நகர சபைத் தலைவர் லோகன் கணபதி, ஸ்கார்கபறோ, அல்பேட்கம்பல் சதுக்கத்தில் நடைபெற்ற மே 18 போர் குற்ற நாள் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் தெரிவித்தார்.

வன்னி நிலப்பரப்பெங்கும் செங்குருதி வெள்ளத்தால் தோய்ந்து துடித்தது. வேலிகளிலும் வன்னி விருச்சங்களிலும் தொங்கிய மனித சதைகளின் சாட்சிகளை எங்கள் சகோதர சகோதரிகள் மூலம் அறிந்திருக்கின்றோம் என்று தெரிவித்த லோகன், இந்த கனத்த துக்க தினத்தில் தங்கள் குடுப்பத்தை, சகதோர சகோதரிகளை, உறவினர்களை, நண்பர்களை இழந்து துயரும் உறவுகளின் துக்கத்தில் நானும் பங்கெடுத்துக்கொள்கின்றேன்.

உலகெங்கும் பரவி வாழும் ஒவ்வொரு தமிழரும் ஈழத்துள்ள எம் உறவுகளுக்கு நீதி, சமவுரிமை, மதிப்பு, மற்றும் அடிப்படை மனிதவுரிமைகள் கிடைக்க பயப்படாது முன்னோக்கிச் செல்லவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

# தமிழ் அரசியல் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டு சிறிலங்கா அரசு தமிழனத்துக்கு

## சாதகமான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்- ஜோன் ஆர்கியூ

சிறிலங்கா அரசு தமிழ் அரசியல் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டு தமிழனத்துக்கு சாதகமான நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபையின் கனடா பிரிவின் பிரதி நிதியான ஜோன் ஆர்கியூ ( John Argue) இலங்கை அரசுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

நேற்று முள்ளிவாய்க்காலில் தமிழினத்துக்கு ஏற்பட்ட பேரழிவின் மூன்றாம் ஆண்டு நினைவை ஒட்டி நாடு கடந்த தமிழீழ அரசினரும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இணைந்து றொறொண்ரோ குயின்ஸ் பார்க் சட்ட சபை முன்றலில் நேற்று மாலை நடாத்திய துக்க தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போது ஜோன் ஆர்கியூ இதனை தெரிவித்தார்.

"கனடாவில் மாத்திரமல்ல சர்வதேச நாடுகள் எங்கும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் தாம் கௌரவத்துடனும், தன்மானத்துடனும் வாழ வழி வகுக்கப்பட வேண்டும் எனக் குரல் எழுப்பி வருகின்றனர். சிறிலங்கா அரசு மனித உரிமைக்கு மதிப்பளிக்காது பல்லாயிரக் கணக்கான தமிழர்களைக்கொன்றழித்தது. கொன்றழிக்கபபடாதிருந்தால் இன்று இக்கூட்டத்தில் மேலும் அதிகளவு தமிழ் மக்கள் கலந்து கொண்டிருப்பார்கள். சிறிலங்கா அரசு தமிழ் அரசியல் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டு தமிழனத்துக்கு சாதகமான நடவடிக்கையினை மேற் கொள்ள வேண்டும். தமிழ் மக்களாகிய உங்களுக்கு உரிமை வழங்கப்படும் வரை நாம் உங்களுடன் இணைந்து போராடுவோம்" என்றார்.

நாடு கடந்த தமிழீழ அரசின் தகவல்துறை அமைச்சர் திரு. சாம் சங்கரசிவம் உரையாற்றிய போது, "மே மாதம் 18ம் திகதி எம்மவரது உள்ளங்களை உறைய வைத்த தினம். சிங்கள அரசு பயங்கரவாத ஒழிப்பு என்ற பெயரில் அரங்கேற்றிய நிகழ்வு. மக்களை ஓட ஓட விரட்டி கொன்றழி த்து, பாடசாலை வைத்தியசாலைகள் எங்கும் குண்டுகளை வீசி கொன்றழி த்த நாள். அதனை இன்று வெற்றி விழாவாகக் கொண்டாடுகின்றது. தமிழர்களாகிய நாம் அழிய மாட்டோம். சாம்ப லில் இருந்து உயிர்த்து எழும்பீனிக்ஸ் பறவையைப் போன்று உயிர்த்து எழுவோம். இன்றைய தினத்தில் நாடு கடந்த தமிழீழ அரசின் வானொலி சேவை யை ஆரம்பித்துள்ளோம். பிரான்ஸில் இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒரு மணி நேர வானொலி நிகழ்ச்சியை பிரான்ஸ், சிங்கப்பூர், மலே சியா, இந்தியா ஆகிய ஐந்து நாடுகளி லும் கேட்க முடியும். காலப் போக்கில் ஏனைய நாடுகளி லும் கேட்கும் படியாக இருக்கும். தமிழ் ஆங்கிலமொழிகளிலும் பின்னர் சிங்கள மொழியிலும் சேவை நடாத்தப்படும்" எனக் கூறினார்.

லிபரல் கட்சி எம்.பி.ஜிம் காரியியானிஸ் தமிழினம் தமது உரிமைகளை வென்றெடுக்க லிபரல் கட்சி ஆதரவளிக்கும் எனக் கூறிய கட்சித் தலைவர் பொப் றேயின் செய்தியினை வாசித்து நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதிநிதியிடம் கையளித்தார்.

முன்னாள் சிறிலங்கா எம்.பி.யான திரு.ஈழவேந்தன் உரையாற்றிய போது, "ஒரு நாட்டிலே இனப் படுகொலை மேற்கொள்ளப்படும் போது அதிலே தலையிடுவதற்கு மூன்றாவது நாடுகளுக்கு உரிமையுண்டு என "ஜெனசைட்" என்ற நூலில் இருந்து மேற்கோள் காட்டி உணர்ச்சி வசமாகப் பேசினார். சிறிலங்காவில் நடைபெற்றது மனித உரிமைக்கு மாறான யுத்தமல்ல. அங்கு நடைபெற் றது இனப்படுகொலை தான் என வலியுறுத்திப் பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# KHARISMA
SAREE CENTER INC.

*The Pampering Luxuries of Life.*

www.kharismasaree.com



*Exclusive Global Designer wear for the Bride and Groom who seek Exquisite Style and Definition to match the Mood and Class of their Wedding.*

*Status, Distinction, Choice and Satisfaction.* ***This is our Promise to you!***

E : info@kharismasaree.com

1585, Markham Road, Unit 110, Scarborough, ON. M1B 2W1, Canada. T : +1 416 792 9234

## Be Proud of Your Smile...

mks


# M.K.S Dental
## Dr. Chandra & Associates

**6065 Steeles Ave. East, Unit E4, Scarborough, ON. M1X 0A8**
**Tel : 416-298-0101 After Hours : 416-700-0101**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களைப் பொலிவாக்கி உற்சாகமுடைய

## சிறந்த மனிதராக்க அமெரிக்காவின் பிரபல மருத்துவர் வழங்கும் ஏழு யோசனைகள்



மருத்துவம்

ஆரோக்கியமான தேக நிலையை உடையவர்களால் மட்டுமே எப்போதும் சிறந்த பொலிவுடனும் , உற்சாகமுடனும் திகழ முடியும் என்கிறார் அமெரிக்காவின் பிரபல மருத்துவர் ஒஷ். இதற்கான ஏழு அடிப்படை படிநிலைகளையும் அவர் ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளார்.

**1. கடைசியாக நீங்கள் தேக ஆரோக்கிய சோதனைகளை செய்து கொண்டது எப்போது ?**

மிகுந்த வேலையுடன் இருப்பதால் வைத்தியசாலைக்குச் செல்ல நேரம் கிடைக்கவில்லை என்பதே ஆரோக்கியத்திற்காக முறைப்படியான மருத்துவ சோதனைகளை செய்து கொள்ளாமல் இருப்பவர்கள் பலர் கூறும் சாக்குப் போக்கு. முறையான சோதனைகளை குறிப்பிட்ட கால இடைவெளியில் செய்து கொள்ளாததால் நோயினை பலர் முற்ற வைத்து விட்டு பின்னர் வருத்தமடைகின்றனர். எனவே குறிப்பிட்ட கால இடைவெளிகளில் கண்டிப்பாக மருத்துவரிடம் சென்று தேக ஆரோக்கியம் குறித்து சோதனை செய்து வர வேண்டும் என்கிறார் ஒஷ்.

**2. இடை அளவில் கவனம் அவசியம்**

அனைவருக்கும் அவரவரின் உடல் எடையும் , உடல் எடை குறியீட்டெண்ணும் தெரிந்திருக்க வேண்டும் என்பது மிகவும் அவசியம். உடல் எடையில் வித்தியாசம் இருப்பினும் கூட எப்போதும் பி.எம்.ஐ எனப்படும் உடல் எடை குறியீட்டெண் 25 க்குள் மட்டுமே இருக்க வேண்டும். 30 க்கு மேலும் 18.5 க்கு கீழும் உடல் எடை குறியீட்டெண்ணைப் பெற்றவர்களுக்கு இதய நோய்களும் , இரண்டாம் வகை நீரழிவு நோய்களும் ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் அதிகம்.

குடலில் தேங்கியுள்ள கொழுப்பின் அளவினை இடை அளவை வைத்தே தெரிந்து கொள்ள முடியும் என்பதால்
இடையின் சுற்றளவு மிக முக்கியமானது என்கிறார் மருத்துவர் ஒஷ். இடை அளவு எப்போதும் ஒருவரின் எடை அளவில் பாதியாகவோ அதற்கு குறைவாகவோ தான் இருக்க வேண்டும். இதற்கு மேல் அதிகமான உடல் இடை அளவினைக் கொண்டவர்களின் குடலில் தேங்கும் கொழுப்பு படிப்படியாக கீழிறங்கி சிறுநீரகத்திற்கு அழுத்தம் கொடுப்பதுடன் மிகை இரத்த அழுத்தத்திற்கும் வழி வகுக்கும். இந்த நிலையால் நாளடைவில் நுரையீரலில் பாதிப்பு உண்டாவதுடன் நீரழிவு நோயும் உண்டாகும்.

**3. குழு செய்கைப்பாடு**

நண்பர்களுடன் சேர்ந்து குழுவாக செயல்களில் இறங்குவோரின் தேக ஆரோக்கியம் சீராக இருப்பதாகவும் இது போன்ற குழு செயகப்பாடு உடையவர்கள் நீண்ட நாள் வாழ முடியும் என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொருவரும் தங்கள் தேக ஆரோக்கியம் குறித்து வெளிப்படையாக அறிவிக்கும் போது அவரவரே தங்கள் ஆரோக்கியத்திற்கான பொறுப்புணர்வை ஏற்றுக் கொள்கின்றனர் என்பதோடு தங்களைச் சுற்றியுள்ள நண்பர்களுக்கும் முன் மாதிரியாகத் திகழ்கின்றனர் என்கிறார் ஒஷ். அதே நேரத்தில் உணவுப் பழக்கவழக்கங்களில் மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டால் மட்டுமே ஆரோக்கியமான தேகத்தைப் பெற முடியும்.

**4. நன்றாக உறங்குங்கள்**

மனிதனின் ஆரோக்கியத்திற்கு மிக முக்கியம் நிம்மதியான உறக்கமே. இதனை நம்மில் பலர் சரியாக கடைபிடிப்பதில்லை. தினமும் ஏழரை மணி நேரங்கள் அனைவரும் உறங்குவது மிகவும் சிறந்தது. சரியான உறக்கம் ஒருவருக்கு வருவதில்லை என்றாலே அவர் உடல் ரீதியாகவோ மன ரீதியாகவோ பாதிக்கபப்ட்டுள்ளார் என்பதே அர்த்தம். சரியான உறக்கமில்லாதவர்கள் அதற்கேற்றபடி ஓய்வெடுத்துக் கொள்ள வேண்டியதும் அவசியம் என்கிறார் ஒஷ். குளிரான இடங்களில் உறங்குவதையே 50 சதவீதம்மக்கள் விரும்புகின்றனர். தளர்வான ஆடைகளை அணிந்து கொண்டு 30 நிமிடங்கள் மங்கலான ஒளியில் இருந்தாலே போதும் தூக்கம் தானாக வந்து விடும். தூங்கும் போது எக்காரணம் கொண்டும் இறுக்கமான ஆடைகளை அணிய வேண்டாம் எனவும் ஒஷ் அறிவுறுத்தியுள்ளார்.

**5. ஏழு நிமிடங்கள் எளிதான உடற்பயிற்சி**

திருப்திகரமான உணர்வுகளைக் கொண்ட மக்கள் அனைவரிடமும் காணப்படும் ஒரு பொதுவான விடயம் அனைத்து பிரச்சினைகளையும் ஒத்தி வைத்து விட்டு சில நிமிடங்கள் அமைதியாக தொடர்ந்து உடற்பயிற்சிகளில் ஈடுபடுவது தான். யோகா, தள்ளும் உடற்பயிற்சிகள், உட்கார்ந்து செய்யக் கூடிய ஆசனங்கள் என அனைத்து உடற்பயிற்சிகளையும் கலந்து தினமும் காலையில் 7 நிமிடங்கள் செய்தாலே போதும் சிறந்த கட்டுடலை பெற்று விடலாம். மன இறுக்கத்திலிருந்து விடுபட 7 நிமிட எளிதான உடற்பயிற்சிகளே போதுமானது.

இதுமட்டுமன்றி வாரத்தில் ஐந்து நாட்கள் 30 – 60 நிமிடங்கள் நடந்தாலே போதும். எந்த மாரத்தானுக்கும் போக வேண்டிய நிலை ஏற்படாது. 40 சதவீதம் இதய நோய்களிலிருந்து விடுபடவும் சீரான நடைபயிற்சி வாய்ப்பேற்படுத்திக் கொடுக்கும்.


**6. மன இறுக்கத்தை மதிப்பிடுங்கள்**

உங்கள் உடல் பருமனை கட்டுப்படுத்த முடியாமல் போவதற்கு மன இறுக்கம் தான் முக்கிய காரணம். வயிற்றுப் பகுதியைச் சுற்றிலும் கொழுப்பு சேர்வதற்கு முக்கிய காரணமாக மன இறுக்கம் கருதப்படுகிறது. கொழுப்பு , சர்க்கரை சத்து நிறைந்த பொருட்களை அதிகமாக உட்கொள்வதற்கும் , செயலற்று இருப்பதற்கும் மறைமுகமான ஒரு காரணமாக மன இறுக்கம் உள்ளது. எனவே மன இறுக்கத்தை மதிப்பிட்டு அதற்குத் தகுந்தவாறு அதிகப்படியான உடற்பயிற்சிகளை மேற்கொண்டு உங்களை சுறுசுறுப்பாக வைத்துக் கொள்ள முயற்சிக்க வேண்டும்.

**7. மரபணுக்களையும் கருத்தில் கொள்ளுங்கள்**

நீங்கள் ஆரோக்கியமானவராகவே இருந்தாலும் சில நேரங்களில் மரபணுக்களால் பலர் நோய் வாய்ப்படுவதுண்டு. நோய்களைக் கட்டுப்படுத்துவதிலும், வரு முன் காப்பதிலும் குடும்ப வரலாறு முக்கிய இடத்தைப் பிடிக்கிறது. உங்கள் ரத்த சம்பந்தமுடைய 65 வயதுள்ள ஒருவரே உங்களுக்கான சரியான மேற்கோள். உங்களின் பலவீனங்கள் தெரிந்த பின்னர் அதற்குத் தகுந்தவாறு உங்களை நீங்கள் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணமாக ஒருவேளை உங்கள் தந்தை 60 வயதில் நுரையீரல் புற்றுநோயினால் இறந்துள்ளார். அவர் புகைப் பழக்கத்திற்கு அடிமையானவரென்றால் அது போன்ற பழக்கவழக்கங்களிலிருந்து உங்களை விடுவித்துக் கொள்வதே சரியானது. வரும் முன் காப்பதே சிறப்பானது என்பதை உணர்ந்து கொண்டால் போதும் ஆரோக்கியம் உங்கள் உள்ளங்கைகளில் தான்.

## ஆரோக்கியமான ஆண்கள் விந்துச் சுரப்பி (prostate) புற்றுநோய் சோதனைகள் செய்து கொள்வதை வழமையாக்கினால் அபாயம்




ஆரோக்கியமான ஆண்கள் புரஸ்ரேட் புற்றுநோய் ( prostate cancer ) எனப்படும் விந்துச் சுரப்பி புற்றுநோய் உள்ளதா என்பதை கண்டறிவதற்கான சோதனைகளை செய்து கொள்ள வேண்டியதில்லை என அமெரிக்க அரசின் நிபுணர்கள் குழு கூறியுள்ளது. விந்துச் சுரப்பி புற்றுநோய்க்கான ரத்தப் பரிசோதனைகளை செய்து கொள்வதில் நன்மைகளை விட பாதிப்புக்களே அதிகம் எனவும் இந்த நிபுணர் குழு எச்சரித்துள்ளது.

நிபுணர் குழுவின் இந்த முடிவுகளுக்கு சிறுநீரக மருத்துவர்கள் கடும் எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். இருந்த போதிலும் நிபுணர் குழு தன் அறிக்கையை மாற்றிக் கொள்வதாய் இல்லை. இதுவரை விந்துச் சுரப்பி புற்றுநோயை கண்டறியும் சிகிச்சையை செய்து கொண்டவர்களில் எத்தனை பேரின் உயிர் காப்பாற்றப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா எனவும் நிபுணர் குழு கேள்வி எழுப்பியுள்ளது,

இது போன்ற பரிசோதனைகளை தேவையின்றி செய்து கொண்ட ஆண்கள் பலருக்கு ஆண்மையின்மை ,நீரொழுக்கு , மார்படைப்பு ஆகிய பாதிப்புக்கள் வந்துள்ளதை சுட்டிக் காட்டியுள்ள நிபுணர் குழு சில நேரங்களில் ஆபத்தே இல்லாத சிறு புற்றுநோய்க் கட்டிகளுக்கு சிகிச்சை எடுத்துக் கொண்டவர்கள் மரணித்துள்ளனர் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனச் சோர்வுள்ள தாய்மார்களின் அரவணைப்பில் வளரும் குழந்தைகளுக்கும் அதே நிலை..!



மகப்பேறுக்குப் பின் மன அழுத்தங்களால் பாதிக்கப்படும் தாய்மார்களிடம் வளரும் குழந்தைகள் பருவ வயதை அடையும் போது அவர்களும் மன அழுத்தங்களால் பாதிக்கப்பட வாய்ப்புக்கள் அதிகம் உள்ளன என்பது ஆய்வொன்றில் நிருபிக்கப்பட்டுள்ளது. அதிலும் முக்கியமாக 2 முதல் 5 வயதிற்குட்பட்ட குழந்தைகளை வளர்க்கும் தாய்க்கு மனச் சோர்வு ஏற்படாமல் பார்த்துக் கொள்வது அவசியம் என ஆராய்ச்சியில் விவரிக்கப்பட்டுள்ளது.

ஒட்டவா பல்கலைக்கழகத்தின் நோய்த் தொற்று அறிவியல் துறையைச் சேர்ந்த நிபுணர் கோல்மன் என்பவரால் இந்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. பருவ வயதினரின் மன ஆரோக்கியம் குறித்த ஆய்வுகளில் நிபுணத்துவம் பெற்றவர் கோல்மன் என்பது குறிப்பிடத்தக்கது.

சிறுவயதில் நடக்கும் எந்த சம்பவங்கள் பின்னாளில் குழந்தைகளின் மனநிலையை பாதிக்கிறது என்ற ஆய்வினை மேற்கொண்ட போது மகப்பேறுக்குப் பின் தாய்க்கு ஏற்படும் மனச் சோர்வே இதற்கு காரணமாக அமைகிறது என்ற முடிவு ஆராய்ச்சியினை மேற்கொண்ட தங்களையே அதிர்ச்சியில் உறைய வைத்ததாகக் கூறுகிறார் கோல்மன்.

2 முதல் 5 வயதுகளில் தான் ஒரு குழந்தை பிறருடன் தொடர்பு கொள்வதை கற்றுக் கொள்கிறது. தன்னைச் சுற்றியுள்ள உலகத்தை புரிய ஆரம்பிக்கிறது. அந்த சமயங்களில் குழந்தைகளின் மூளையில் பல வித மாற்றங்கள் உண்டாகின்றன. பெற்றோர்கள் குறிப்பாக தாய்மார்கள் இந்த மாற்றங்களை குழந்தைகளுக்கு அறிய வைக்கும் விதத்தில் அனைவரிடமும் குழந்தைகள் நடந்து கொள்வது குறித்து பயிற்சியளிக்க வேண்டும். மனச் சோர்வுள்ள தாய்மார்களின் குழந்தைகளுக்கு இதில் குறைவு ஏற்படுவதால் தான் பருவ வயதில் அந்த குழந்தைகள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என கோல்மன் விளக்கமளித்துள்ளார்.

## நீரழிவு நோய் (diabetes) மருந்தான அக்டோசை எடுத்துக் கொள்பவர்களுக்கு சிறுநீர்ப்பை புற்றுநோய் உண்டாகும் அபாயம்!

நீரழிவு நோய்க்கு (Diabetes) அக்டோஸ் (Actos) மாத்திரைகளை எடுத்துக் கொள்பவர்களுக்கு சிறுநீர்ப்பை புற்றுநோய் உண்டாவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என கனடிய சுகாதார அமைப்பு எச்சரித்துள்ளது.

இந்த அபாயத்தினை அறியப் படுத்தும் விதத்தில் அக்டோஸ் மாத்திரைகளின் முகப்படையாளங்கள் மாற்றப்பட வேண்டும் எனவும் உத்திரவிடப்பட்டுள்ளது.
பியோஜிலிட்டாசோன் (pioglitazone) என்ற மருந்தின் வணிகப் பெயர் தான் அக்டோஸ்.

இரண்டாம் வகை நீரழிவு நோயாளிகளை குணப்படுத்த இந்த மருந்து பயன்படுத்தப்படுகிறது. இதுவும் அவன்டியா (Avandia) மருந்துடன் சேர்ந்தது தான்.

அவன்டியா (Avandia) மருந்து சில காலங்களுக்கு முன்பு நீரழிவு நோய் சிகிச்சைகளுக்கு பயன்பட்ட முக்கிய மருந்தாக இருந்தது. இந்த மருந்தினை எடுத்துக் கொண்டால் இதய நோய் வருவதற்கான வாய்ப்புக்கள் அதிகம் என்ற ஆய்வுகள் வெளியான பின்னரே இதன் பயன்பாடு குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

## மூளை மற்றும் தண்டுவட மரப்பு நோய்களுக்கான (Multiple Sclerosis) புதுவித சிகிச்சைக்கு கனடாவில் தடை

மூளை மற்றும் தண்டுவட மரப்பு நோய்களினால் பாதிக்கப்பட்டுள்ளோரை சர்ச்சைக்குள்ளான புது விதமான நரம்பு சிகிச்சை ஒன்றின் மூலம் குணப்படுத்துவது மிகவும் ஆபத்தானது என அமெரிக்க உணவு மற்றும் மருந்து கண்காணிப்பு அமைப்பு (எச்சரித்துள்ளது. chronic cerebro-spinal venous insufficiency (CCSVI) என்ற புதுவித சிகிச்சையை மேற்கொண்டோர் பலருக்கு பாதிப்புக்கள் அதிகமாகி இறந்துள்ளனர் எனவும் இந்த அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

இத்தாலியைச் சேர்ந்த இரத்த நாள அறுவை சிகிச்சை நிபுணரான Dr. பவுலோ சம்போனி (Dr. Paolo Zamboni) என்பவரே முதன்முதலில் இந்த அறுவை சிகிச்சையினை அறிமுகப் படுத்தினார். கழுத்தில் உள்ள குறுகிய நரம்புகள் இரத்த ஓட்டத்தை சரியான வகையில் மூளைக்கு அனுப்பாததே மூளை மற்றும் தண்டுவட மரப்பு நோய்களுக்கு காரணம் என இவர் கண்டுபிடித்தார். அதனால் பலூன்களின் மூலம் அந்த இரத்த நாளங்களின் அடைப்பை சரி செய்தாலே நோய் சரியாகி விடும் என்பதே இவரின் வாதம்.

இந்த சிகிச்சை முறையை பெரும்பாலான மருத்துவர்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை, அமெரிக்கா, கனடா ஆகிய நாடுகளில் இந்த சிகிச்சைக்கு அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்ற போதிலும் கூட நோயினால் பாதிக்கப்பட்டோர் பலர் இத்தாலி சென்று சிகிச்சை பெற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பருவ வயதினரின் மனச் சோர்வை நீக்க புதிய கணினி விளையாட்டு

மனச் சோர்வினால் பாதிக்கப்பட்டுள்ள பருவ வயதினருடன் பேசி அவைகளை முற்றிலுமாக குணப்படுத்தக் கூடிய கணினி விளையாட்டு ஒன்று ஆராய்ச்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. உளச் சோர்வினால் பாதிப்படைந்துள்ளவர்களுக்கான இந்த பிரத்யேக விளையாட்டினை அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பிரித்தானிய மருத்துவ இதழில் இந்த ஆராய்ச்சி வெளியாகியுள்ளது.

இந்த ஆராய்ச்சிக்காக 12 முதல் 19 வயதுள்ள மனச் சோர்வினால் பாதிக்கப்பட்ட 187 பருவ வயதினர் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். ஸ்பார்க்ஸ் எனப்படும் புதிய முப்பரிமாண விளையாட்டை பாதி வரையிலும் விளையாடச் செய்ததிலேயே இவர்களின் உளச்சோர்வு நிலை முற்றிலுமாக குணப்படுத்தப்பட்டுள்ளது.

- உணர்ச்சிகள்
- புதிய நம்பிக்கை உண்டாகுதல்
- உதவாத எண்ணங்களை அறிந்து கொள்ளுதல்

உள்ளிட்ட பல தலைப்புக்களில் ஏழு வாரங்களுக்கு ஸ்பார்க்ஸ் முப்பரிமாண விளையாட்டு இவர்களுக்காக பயன்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு பின்னர் பாதிக்கப்பட்டவர்கள் தங்களிடமிருந்த எதிர்மறை சிந்தனைகளை விட்டொழித்து விரைவாக இயல்பு வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர் என்பதுநிருபணமாகியுள்ளது. ஒப்பிட்டுப் பார்த்ததில் வழமையான பிற சிகிச்சை முறைகளைக் காட்டிலும் ஸ்பார்க்ஸ் முப்பரிமாண விளையாட்டு முறை சிறந்தது என்பதும் தெரிய வந்துள்ளது

## இரு மொழிகளில் பேசும் புலமை உள்ளோர்க்கு மூளைத்தேய்வு ஏற்படுவது தாமதமாகும் - ரொறொண்டோ ஆராய்ச்சியாளர்கள்

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசுவோருக்கு இயல்பாகவே வயதான பின் அனைவருக்கும்ஏற்படக்கூடிய மூளைத் தேய்வு ஏற்படுவது கால தாமதமாகும் என புதிய ஆராய்ச்சி ஒன்றில்கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யோர்க் பல்கலைக்கழகத்தை சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் இதற்காகமருத்துவமனைகளுக்குச் சென்று மனநோயால் பாதிக்கப்பட்டுள்ள முதியவர்கள் குறித்த ஆய்வினைமேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் விபரங்கள் அனைத்தையும் பகுத்துப் பார்த்ததில்ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் பேசக்கூடியவர்களுக்கு மூளைத் தேய்வு இயல்பாக வருவதை விட நான்கு அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு பின்னரேஉருவாகியுள்ளது நிருபணம் செய்யப்பட்டுள்ளது. இயல்பாக முதியோர்களுக்கு 75.4 வயதில் மூளைத்தேய்வும் , ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளைப் பேசும் முதியோருக்கு 78.6 வயதிலேயே இந்நிலைஉண்டாகியுள்ளது.

ஒன்றுக்கும் மேற்பட்ட மொழிகளில் கவனம் செலுத்தும் திறமையுள்ளோரின் மூளை நரம்புகள் உடல்ரீதியாகவும், மன ரீதியாகவும் அடிக்கடி தூண்டப்படுவதாலேயே நீண்ட நாட்களுக்கு செயலாற்றும் திறன்உடையதாக உள்ளது என ஆராய்ச்சியாளர்கள் கூறியுள்ளனர்.

உலகத்தமிழர்களை பொருளாராத ரீதியாகவும்
பண்பாட்டு ரீதியாகவும் இணைக்கும் இணையம்
Promoting Prosperity and Co-operation
www.tamilbizcard.com
Tamils' Business Connections

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவங்கள் பேசும் பரதநாட்டியக் கலை

– தஷ்ஷாயினி பிரபாகர் –



ஒவ்வோர் இனத்தின் பெருமைகளைப் பறை சாற்றுவது அவ்வினத்தினால் பேணி வளர்க்கப்பட்டு வரும் கலை, கலாசாரம், பண்பாடு ஆகியனவாகும். இந்த வகையில் தமிழினம் மிகுந்த சிறப்புகளைக் கொண்ட ஓர் இனமாக மிளிர்ந்து வருவதை உலகறியும்.

தமிழினத்தின் கலைகளில் மிக முக்கியமானதோர் இடத்தைப் பரதநாட்டியக் கலை பெற்றிருக்கிறது என்பதை யாவரும் ஒப்புக்கொள்வர். அதற்கு ஒரு காரணமாக அமைவது அதன் தொன்மையாகும். இந்நடனக் கலையின் பெருமைகளையும் நுட்பங்களைப் பற்றியும் பரத நடன விற்பன்னர்கள் சிலர் ஆய்வு நுட்பங்களை எழுதியும் அதன் வளர்ச்சி மற்றும் அதன் மாற்றங்கள் குறித்து தமது அனுபவபூர்வமான கருத்துக்களையும் தெரிவித்து வந்திருக்கிறார்கள். நாட்டியத்தில் காட்ட முடியாத ஞானமோ, சிறப்போ, கலையோ, செயலோ எவையுமே நமக்கில்லை என்பர்.

பரதக் கலையின் வளர்ச்சி குறித்து சென்னை பரதாஞ்சலி பரதநாட்டிய விற்பன்னர்களான வி.பி. தனஞ்செயன், சாந்தா தனஞ்செயன் ஆகியோர் இணைந்து "சிவயோகம்" (லண்டன்) சிறப்பு மலரில் எழுதிய கட்டுரை ஒன்றின் சில அம்சங்களைக் கண்டுக் குறிப்பிடுதல் தகும்.

நடனக் கலைஞர்களைப் பற்றி சங்க இலக்கியமான தொல்காப்பியம், சங்க இலக்கியமான பத்துப் பாட்டு, எட்டுத் தொகை போன்ற நூல்கள் மிக அதிக அளவில் கூத்து என்றும் கடத்தினை நிகழ்த்துபவர்கள் கடத்தல் என்றும் விரலியர் என்றும் எடுத்துக் கூறிப் பலவாறாகப் போற்றுகின்றன.

சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையும் ஆய்ச்சியர் குழவையும் பண்டைய நடனக் கலையின் நுட்பங்களையும் பாடு பொருள்களையும் விரிவாக எடுத்து இயம்புகின்றன. சிலம்பினுக்கு உரை எழுதிய அடியார்க்கு நல்லார் தம் உரையில் கூத்து நூல், பரத சேனாதிபதியம், இந்திர காளியம் எனும் நடன நூல்களைப் பற்றி விவரித்துள்ளார். இத்தகு காலத்தொன்மையுள்ள பரதம் காலப்போக்கில் தனது புறவடிவையும் அர வடிவான பாடுபொருளையும் மாற்றிக் கொண்டே வந்திருக்கிறது. எந்த ஒரு கலையும் அது தோன்றிய காலத்தில் இருந்தது போலவே இன்றும் இருந்தால் அக்கலை தேக்க நிலையை அடைந்து விட்டது என்று பொருள். ஆனால் பரதக் கலை காலத்திற்கு ஏற்ப தன்னுள் மாற்றத்தைக் கொண்டு இன்னும் புதிது புதிதாக தனது நோக்கிலும் பாடு பொருள்களிலும் மாறிக்கொண்டே இருக்கிறது. இம்மாற்றம் பழமையை முற்றிலும் விளக்கி புதுமை மாறாத பழமை ஒன்றே குறி அளவில் மாற்றத்தைக் கொள்ளாது எனும் வரம்பினும் புதுமை எனும் புத்தொழியைப் பாய்ச்சியது எனலாம்.

பண்டைய மூவேந்தர் காலத்தில் இக்கலை கோயில்களில் பணியாற்றிய ருத்ர பணிகம், தேவர் அடியார், ஸ்ரீ மாணிக்கம் என்பவர்களால் பேணி வளர்க்கப்பட்டது. காலப்போக்கில் கோயில்களில் வருவாய் குறையவே கோயில்களில் பணியாற்றிய தேவர் அடியார்கள் இக்கலையைத் தங்கள் இல்லத்தில் கற்பிக்கத் துவங்கினர். அவ்வாறு அவர்கள் கற்பித்தபோது இக்கலையில் தங்களுக்கென ஒரு பாணியைப் பின்பற்றினர். துவந்த காலத்தில் கோயில்களில் ஆடப்பெற்ற நடனம், முற்றிலும் இறைவனின் புகழைப் பாடுவதாகவும் இறைவன் நிகழ்த்திய செயல்களுமென புராணங்கள் கூறிய செய்திகளையே பாடுவதாகவும் இறைவன் நிகழ்த்திய செயல்களுமென புராணங்கள் கூறிய செய்திகளையே பாடுபொருளாகக் கொண்டு அபிநயத்துடன் ஆடியும் வந்தனர். இறைவனின் உலாவிலும் இக்கணிகையர் நான்கு வீதிகள் சந்திக்கும் பகுதியான சதுருத்தில் நடன நிகழ்ச்சியைச் செய்ததால் இது சதிர் என்னும் பெயரையும் பெற்றுத் திகழ்ந்தது. கோயிலை நீத்த இந்நடனம் கணிகையர் இல்லத்தில் கற்பிக்கப்பட்டபோது இதனது பாடு பொருளிலும் அமைப்பிலும் பெருமளவு மாற்றங்களைக் கொண்டது. இம்மாற்றங்களைப் பெரிதும் முறைப்படுத்தியவர்கள் தஞ்சை நால்வர் எனில் மிகையாகாது.

தஞ்சை நால்வரின் பங்களிப்பில் பரதம் முறைப்படுத்தப்பட்டபோது இந்நடனத்தில் புஷ்பாஞ்சலி, பதம், வர்யும், ஜாவளி, தில்லானா போன்றன சேர்க்கப்பட்டன. இத்தகு மாற்றங்களைக் கொண்டிருந்தாலும் நால்வரின் படைப்புகளில் சிருங்கார தாமே பிரதான ரஸமாகக் கொள்ளப்பட்டது. சிருங்கார ரஸத்திலும் நாயக நாயகி பாவத்தில் இறைவனுக்குப் பதிலாக அன்றிலிருந்து மன்னர்களைப் பாட்டுடைத் தலைவனாகவும் பாடல்கள் புனையப் பெற்றன. நடனங்கள் நிகழ்த்தப் பெற்றன.

ஆங்கிலேயர் வருகை பின்னர் சுதந்திரம் என்னும் சமூக மாற்றம் மற்றும் அரசியல் மாற்றங்களினால் அனைத்துச் செயற்பாடுகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. அத்தகு மாற்றம் நடனத்திலும் ஏற்பட்டது. நடனம் கோயிலில் இருந்து கணிகையர் இடம் சென்று பின்னர் நடனப் பள்ளிகளை வந்தடைந்தது. நடனப் பள்ளிகளை வந்தடைவதற்கு முன் பரதம் சில ஊர்களைச் சார்ந்த கலைஞர்களின் தனித்துவப் பந்தனை நல்லூர், மெலாட்டூர், வழுவூர், காஞ்சிபுரம் எனும் பாணிகளைக் கொண்டு அப்பாணிகளின் விதிமுறைகள் இன்று வரை பின்பற்றப்படுகின்றன"" என்றவாறு அவர்கள் குறிப்பிடுகின்றனர். அதனைத் தொடர்ந்து திருமதி ருக்மணி அருண்டேல் உட்படப் பல நடன விற்பன்னர்கள் பரதநாட்டியக் கலையைச் செழுமைப்படுத்திப் பேணி வந்திருப்பதை நாமறிவோம்.

பாவம், ராகம், தாளம் ஆகியவற்றின் சங்கமமாக விளங்குவது பரதநாட்டியம். பாவமானது ஆண், பெண் இருபாலாருடைய மனத்திலுண்டாகும் உணர்ச்சிகளை ஜாடைகளால் எடுத்துக் காண்பிப்பது பாவமாகும். பாவமானது அவரவர்களின் பால், வயது மற்றும் சூழ்நிலைக்கேற்ற வண்ணம் வேறுபடக் கூடியது. இது கருத்துக்களைப் புலப்படுத்துவதோடு உணர்ச்சிகளை நவரஸங்கள் மூலம் அதாவது பாவத்தின் மூலம் வெளிப்படுத்திக் காட்டுவதேயாகும். இப் பாவம் நான்கு வகைப்படும். அவையாவன விபாவம், அனுபாவம், வியபிசாரி பாவம், சாத்வீக பாவம் என்பன. இந்நான்கு வகை பாவங்களும் கலந்து வருவது சஞ்சாரி பாவமாகும். இவ்விதமாக தமது நிருத்தியம் என்ற நூலில் குறிப்பிடும் பாத கலா வித்தகர் மீரா மங்கலேஸ்வரன் அவர்கள் ராகம், தாளம் ஆகியவற்றையும் விளக்கி இருக்கிறார். நிருத்தம், நிருத்தியம், நாட்டியம் நடனத்தின் முப்பெரும் பிரிவுகள் என்பதைக் குறிப்பிட்டு விளக்கும்போது நிருத்தியம் என்பதற்கு தரும் விளக்கம் கீழ்க்கண்டவாறு அமைகின்றது.

"கீதம், அபிநயம், பாவம் இவைகளைக் கொண்டு தாளக்கட்டு விடாமல் ஆட வேண்டியவை நிருத்தமாகும். நடனமாகிய நிருத்தமும் அபிநயக் கலையால் கதையை (கருத்துக்களை) வெளிப்படுத்தும் நாட்டியமும் கலந்து திகமும் கலை நிருத்தியம் எனப்படும். பாடலின் பொருளைக் கை முத்திரைகளினாலும் தாளத்தினைப் பாதங்களைத் தட்டி ஆடுவதாலும் பாவத்தினை முகத்தினாலும் கண்களினாலும் வெளிக்கொண்டு வரல் நிருத்தியமாகும். ரஸ பாவங்களைக் கூட்டி தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடக்கி கருத்தைப் புலப்படுத்தலே நிருத்தியமாகும். இதற்கு நிறையப் பயிற்சிகள் செய்ய வேண்டும். நன்றாகப் பயிற்சிகள் செய்யப்பட்டு ஆடப்படும் நிருத்தியம், மன நிறைவை அளிக்கவல்ல நுண்கலையாகும்"" எனக்குறிப்பிடுவர் பாவங்களையும் நவரஸங்களையும் பொருட்கள் மற்றும் செயற்பாடுகளையும் விளக்கும் அஸம்யுத ஆயத்தம் (ஒற்றைக் கை முத்திரைகள் மற்றும் ஸம்யுத ஹஸ்த்தும் (இரட்டைக் கை முத்திரைகள்) ஆகியவற்றையும் கண்டு விபரிக்கின்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒன்றாரியோவில் மாணவர்களுக்கு வழங்கப்படுகின்ற கல்வி உதவித் தொகை தவறாக பயன்படுத்தப்படுகின்றது?

ஒன்றாரியோவில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்படுமானால் அவை பெரும்பாலும் வேறு செலவீனங்களுக்கே மாணவ சமுதாயத்தால் பயன்படுத்தப்படும் எனத் தெரிய வந்துள்ளது. இது குறித்து பல மாணவர்களிடம் கருத்துக் கேட்ட போது கல்வி உதவித் தொகையைக் கொண்டு விலையுயர்ந்த குளிர்கால ஆடைகளை வாங்கவுள்ளதாக சிலர் கூறினர்.

இந்த தொகை கடனாகவே மாணவர்களுக்கு கொடுக்கப்படுகிறது என்ற போதிலும் கூட அவற்றைப் பற்றி கவலைப்படாமல் பொழுதுபோக்கு அம்சங்களுக்கு அதனை செலவழிப்பதை பல மாணவர்கள் பெருமையாகவே கருதுகின்றனர். இந்த வருடம் அளிக்கப்படவுள்ள கல்வி உதவித் தொகையைக் கொண்டு நியூயார்க் நகரை சுற்றிப் பார்க்க விரும்புவதாக மாணவர் ஒருவர் கூறுகிறார். கடனாகவே இந்த தொகை தனக்கு வழங்கப்பட்டுள்ளது தெரியும் என்ற போதிலும் கூட இளமைக் காலங்களில் தான் விரும்புவதை செய்ய வேண்டும் என்பதினாலேயே இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் கூறியுள்ளார்.

மேலும் சில மாணவர்கள் வட்டியில்லாமல் கிடைக்கும் இந்த கடன்தொகையை தங்கள் செலவுகளுக்காக பயன்படுத்தினால் பாடசாலை படிப்பினை முடிக்கும் வரை பகுதி நேர வேலைகளுக்குச் செல்வதை தவிர்க்க முடியும் எனவும் கூறுகின்றனர். ஒட்டு மொத்தமாக இதையெல்லாம் கருத்தில் கொண்டு பார்க்கும் போது மேல்படிப்புக்களுக்காக அரசு கொடுக்கவுள்ள இந்த உதவித்தொகையை பெரும்பான்மையான மாணவர்கள் படிப்பிற்காக செலவிடப் போவதில்லை என்பது உறுதியாகிறது.

## மொழி, கலைகலாச்சாரம், பண்பாடு, ஆகியவற்றுக்காக குரல் கொடுத்த மக்கள் மீது படுகொலை- அமைச்சர் கிலேன் முரே

தங்களது மொழி, கலைகலாச்சாரம், பண்பாடு, ஆகியவற்றுக்காக குரல் கொடுத்த மக்கள் மீது மூன்று ஆண்டுகளிற்கு முன் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை முயற்சி ஒரு கோரமான வெறுக்கத்தக்க செயல் என ஒன்றாரியோ மாகாண கல்வி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சர் கிலன் முரே தெரிவித்தார்.

நேற்று ஸ்கார்பரோ அல்பெட்கம்பல் சதுக்கத்தில் கனடியத் கனடியத் தமிழர் தேசிய அவையால் நடாத்தப்பட்ட போர்க்குற்ற நாள் நிகழ்வில் கலந்துகொண்டுசிறப்புரை வழங்கிய போது மேற்படி கருத்தினை அமைச்சர் தெரிவித்தார். இ குருவி செய்திகள்

இன்றைய நாளை ஒன்றாரியோவில் உள்ளவர்கள் மறக்க முடியாது குறிப்பாக குடுப்பத்தினரை , உறவுகளை, நண்பர்களை, தமிழீழத்திற்காக போராடியவர்களை இழந்த தமிழ் மக்களால் மறக்க முடியாத ஒரு கனதியான துக்கதினமாகும் என்று தெரிவித்த கிலன் முரே கனடிய மண்ணில் 2009 மே மாதம் முள்ளிவாய்காலில் பெருமளவில் இனப்படுகொலை செய்யப்பட்ட ஈழத்தமிழர்களுக்கான நினைவாலயத்தை டொன்வலிபார்க் – பே (DVP-Bay) க்கு அருகாமையில் எவர்கிறீன் பிறீக்வேக்ஸில் நிறுவியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முரே தொடர்ந்து பேசுகையில், ஆசிய, மேற்கு ஐரோப்பிய மக்களிடையே குறிப்பாக தமிழ் மக்களிடையே மரம் நடுகை முக்கிய இடம் வகிக்கிறது. மரங்கள் புகலிடம், திடநிலை, பலம், மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றின் வலு தான் மரம். இவை தமிழரின் வாழ்வியலில் கலந்திருப்பதனால், முள்ளிவாய்காலில் கொல்லப்பட்ட 40,000 மக்களின் நினைவாக 40,000 மரங்களை நடுகை செய்ய இருப்பதாகவும் இதற்கு தமிழ் அமைப்புக்களை தங்கள் பங்களிப்பை ஒவ்வொரு ஆண்டும் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்த மரநடுகை கனடாவில் பிறக்கும் தமிழ் பிள்ளைகளுக்கு தாங்கள் எங்கிருந்து வந்தோம், ஈழத்தில் தங்கள் பெற்றோர், சகோதர சகோதரிகள், மற்றும் உறவினர்கள், போராட்ட வீர்ர்களை நினைவு கூறும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

## சிறிலங்கா அரசு தமிழினத்துக்கு எதிரான மேற்கொண்டு வரும் அநீதியான செயல்கள் குறித்து கனடா அரசும் பிற நாடுகளும் நடவடிக்கை எடுக்க வேண்டும்-ராதிகா சிற்சபைஈசன்




ஈழத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு உரிமை வேண்டுமாயின் நாம் இங்கிருந்து குரல் கொடுக்க வேண்டும்.போர் முடிவடைந்து முன்று ஆண்டுகளாகி விட்டன அது தொடர்பான அறிக்கை ஒன்றினை நேற்றைய பாராளுமன்ற கூட்டத்தொடரில் அவையில் வாசித்திருக்கின்றேன் என்று நேற்று ஸ்கார்பரோ அல்பெட்கம்பல் சதுக்கத்தில் கனடியத் கனடியத் தமிழர் தேசிய அவையால் நடாத்தப்பட்ட போர்க்குற்ற நாள் நிகழ்வில் கலந்துகொண்டுசிறப்புரை வழங்கிய போது மேற்படி கருத்தினை ராதிகா சிற்சபைஈசன் தெரிவித்தார்.

1983ம் ஆண்டு முதல் 2009ம் ஆண்டு வரை தமிழ் மக்கள் மீது தாக்குதல் மேற் கொள்ளப்பட்டு வந்துள்ளது.அதனால் தமிழ் மக்கள் இடம் பெயர்ந்தும், புலம் பெயர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகிவருகின்றனர். சிறிலங்கா அரசு தமிழினத்துக்கு எதிரான மேற்கொண்டு வரும் தொடரும் ஆள்கடத்தல்கள், சித்திரவதைகள், திட்டமிட்ட பெண்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட கொடுமைகள், தகவல் சேகரிப்புக்கான சுதந்திரமின்மை, சட்டவிரோத குடியேற்றங்கள், சிறுபான்மையினத்தவருக்கு மதச் சுதந்திமின்மை போன்றன அதிகரித்துச் செல்லவதாக மனிதநேய அமைப்புக்கள் தெரிவிக்கின்றன. இந்தஅநீதியான செயல்கள் குறித்து கனடா அரசும் பிற நாடுகளும் போர்குற்றம் தொடர்பாக சுதந்திரமான விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என அவ்வறிக்கையில் வலியுறுத்தியிருக்கின்றேன் எனக் கூறிய ராதிகா, புதிய ஜனநாயக் கட்சியின் தலைவர் தோமஸ் மக்கெயர் இதே காரணத்துக்கான அறிக்கை ஒன்றை இன்று மே 19 வெளியிடுவர் எனத் தெரிவித்தார்.

கனடாவில் இருக்கும் தமிழராகிய எமக்கு எமது கருத்துக்களை வெளிப்படுத்தும் சுதந்திரம் உண்டு. அதன் காரணமாக நாம் இங்கு குழுமியுள்ளோம். ஆனால் அங்குள்ள எமது உறவுகளுக்கு அவை மறுக்கப்பட்டு இருக்கின்றன. எனவே தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து அவர்களுக்காக இங்கிருந்து போராட வேண்டும் எனவும் ராதிகா வேண்டுகோள் விடுத்தார்.

## சிறிலங்கா அரசுக்கு எதிராக சர்வதேச நாடுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்! என்.டி.பி.எம்.பி.பேராசிரியர் கிறெய்க் ஸ்கொட்



"ராஜபக்சவின் குடும்பம் தமிழ் மக்களின் பிரதேசங்களை சிங்கள மயமாக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது. யுத்தப் படுகொலைகளை ஏற்றுக் கொள்ளாது மறுத்து வரு கின்றது. ஆனால் லண்டனில் உள்ள சனல்–4 தொலைக் காட்சி நிறுவனம் தகுந்த ஆதாரங்களைத் திரட்டி திரைப்படமாக வெளியிட்டுள்ளது. அதனை நாம் பாராளுமன்றத்தில் பார்வையிட்டோம். அதைப் பார்த்து முடிந்ததும் நாமெல்லோரும் மௌனித்து விட்டோம். இனிமேலும் சிறிலங்கா அரசின் கூற்றினை நாம் நம்பப்போவதில்லை. யுத்தத்தின் போது இடம்பெற்ற கொலைகளுக்கு பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பேற்க வேண்டும். அவர்களை சர்வதேச நீதிமன்றத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்கப்பட வேண்டுமென கனடா அரசு வற்புறுத்தி வருகின்றது. அதுமாத்திரமல்ல பொது நலவாய நாடுகளின் அடுத்த மாநாட்டினை சிறிலங்காவில் நடாத்த அனுமதிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தி வருகின்றது"

மே மாதம் 18ம் திகதி முள்ளிவாய்க்காலில் தமிழினத்துக்கு ஏற்பட்ட பேரழிவின் மூன்றாம் ஆண்டு நினைவை ஒட்டி நாடு கடந்த தமிழீழ அரசினரும் ஏனைய தமிழ் அமைப்புக்களும் இணைந்து ரொறொண்ரோ குயின்ஸ் பார்க் சட்ட சபை முன்றலில் நேற்று மாலை நடாத்திய துக்க தின வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய என்.டி.பி.எம்.பி. பேராசிரியர் கிரெய்க் ஸ்கொட் (ஊசயபை ளுஉழவவ) இவ்வாறு கூறினார். காலஞ் சென்ற என்.டி.பி.தலைவர் ஜக் லேட்டனின் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி ஈட்டிய இவர் "நான் ஜக் லேட்டனைப் பின்பற்றி தமிழினத்தவர்களின் உரிமையைப் பெற்றுக் கொடுக்கப் போராடுவேன். எமது கட்சி கடந்த மூன்று ஆண்டு கால மாக தமிழினத்தின் மீது மேற்கொள்ளப்பட்டஅநீதிகளுக்கான ஆதாரங்களை திரட்டி வருகின்றது" என்றார்.

இந்த துக்கதின நினைவேந்தல் நிகழ்வில் ராதிகா சிற்சபை ஈசன் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கி இருந்தார். – இ குருவி செய்திகள்

நாடு கடந்த தமிழீழ அரசின் உதவிப் பிரதமர் டாக்டர் ராம் சிவலிங்கம், கனடா தமிழர் இணையத் தலைவரும், இன்றைய விழா ஏற்பாட்டாளர்களுள் ஒருவருமான திரு.வின் மகாலிங்கம், டாக்டர் ராஜேஸ் லோகன், திரு.ஜோன் ஆர்கியூ, படைப்பாளிகள் கழகத் தலைவர் திரு.நக்கீரன் ஆகியோர் பொதுச் சுடர் ஏற்றி நிகழ்ச்சியினை ஆரம்பித்து வைத்தனர். அடுத்து சிறுமிகள் கனடா தேசிய கீதம், தமிழ்த்தாய் வாழ்த்து பாடினார்கள்.

## எமக்குள் ஏன் இந்த பிளவு மக்களுக்காக ஓர் அணியில் நிற்போம்- நீதான் சான்

உலக்க நாடுகள் திரும்பி பார்க்காது இருந்த போதும் மூன்று ஆண்டுகளுக்கு முன் தாயகத்தில் எம்மக்களுக்கு நிகழ்ந்த இன்னல்களுக்கு எதிராக உலகெங்கும் உள்ள தமிழர்கள் உணர்வு பூர்வமாக எழுச்சி கொண்டு ஆயிரமாயிரமாக விதிகளில் போராட்டமாக, உண்ணாநிலை போராட்டமாக துடித்து எழுந்து ஒரே குரலில் ஒரே சமுகமாக போராடினோம். அதனை இந்த மே மாதத்தில் நினைவு கூறும் அதே தருணத்தில், இன்று ஒரே நிகழ்வுக்காக நாங்கள் பிரிந்து நிற்கின்றோம். இது மிகவும் கவலை அளிக்கின்றது என் நீதன் சான் ஸ்கார்பரோ அல்பெட்கம்பல் சதுக்கத்தில் கனடியத் கனடியத் தமிழர் தேசிய அவையால் நடாத்தப்பட்ட போர்க்குற்ற நாள் நிகழ்வில் நேற்று கலந்துகொண்டு சிறப்புரை வழங்கிய போது தெரிவித்தார்.

எங்களுக்குள் இருக்கும் அனைத்து சர்ச்சைகள் , போட்டிகள், தலைமத்துவப் போட்டிகள் இவை அனைத்தும் விரைவில் தீர்க்கப்பட வேண்டும். நான் உட்பட இந்த விழாவை நாடாத்துபவர்கள் தங்கள் தவறுகளை ஏற்றுகொள்ள முன்வர வேண்டும். ஒரே நிகழ்வை பிளவுபட்டு நின்று செய்யாமல் மக்களுக்காக ஒரே அணியில் நின்று செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைக்கான பல்வேறு வடிவங்கள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. வெளிப்படையாக தமிழீழத்துக்கான ஆதரவினை அளித்துக் கொண்டு, தமிழீழச் சின்னங்களை மதித்துக் கொண்டும் இருக்கின்ற ஒருவர், அரசியலில் வெற்றிப் பெறுவது என்பது தன்மானத்தமிழன் வெற்றிப் பெற்றதாக நான் கருதுகின்றேன். தமிழ் தேசியத்தைக் விட்டுவிட்டு, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை கைவிட்டு, தமிழ் தேசியத்தலைவரை மறந்து விட்டு எல்லோராலும் அரசியல் செய்ய முடியும். ஆனால், அடுத்த சந்ததி தமிழீழத்தை மையப்படுத்தி, அதனை மனதில் நிறுத்தித் தான் கனடாவில் அரசியல் செய்ய வேண்டும் என புதிய ஜனநாயகக்கட்சியின் மாகாண தலைவராக தெரிவு செய்யப்பட்ட நீதன் சான் தனது உரையில் குறிப்பிட்டார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து ஆலயங்களும் அதன் தனித்துவக் கோபுர வடிவமைப்புகளும்

உலகளாவிய ரீதியில் பல வகைப்பட மதங்கள் மனித வாழ்க்கையுடன் ஒன்றி வளம்பெற்று வந்துள்ளன. மனிதனுக்கு அறநெறிக் கொள்கைகளைப் புகட்டி மனித வாழ்க்கையை வழிநடத்தும் ஆன்மீக ஈடேற்ற மார்க்கமே மதம் எனச் குறிப்பிடுவர். தனித்துவக் கொள்கைகளை சமத்துவ, மனிதநேயப் பண்புகளைத் தத்துவார்த்த சிந்தனை, உணர்வுகளை, மனித மனதில் விதைத்து வளர்க்கும் பண்பாட்டியலே மதம் அல்லது மார்க்கம் என விளங்கிக் கொள்ளல் இன்றியமையாததாகும். பொதுவாக எந்த ஒரு மதமும், அன்பு, அகிம்சை, ஆன்மீகம் ஆகிய நற்பண்புகளை மக்களிடையே ஊட்டி வளர்க்கின்றது என்பதில் ஐயமில்லை. எந்த மதமும் அவற்றுக்கென தனித்துவமாக வடிவமைக்கப்பட்ட வழிபாட்டுத், தலத்தை மையமாகக் கொண்டு மிளிர்கின்றது.
ஒவ்வொரு மத வழிபாட்டுத் தலமும் தனித்துவமான கட்டிடக் கலை வடிவம் செறிந்த கட்டுமான கலைத்துவம் மிக்கதாக விளங்குகின்றது. அத்தகைய வழிபாட்டுத் தலங்களை நாம் பார்த்த போதிலேயே அவை எம்மதம் சார் வழிபாட்டுத் தலம் என்பதினை இலகுவில் உணர்ந்து கொள்ள முடிகின்றது.


ஆவரங்கால் சிவன் ஆலயம்

இந்த வகையில் உலகளாவிய ரீதியில், இந்து மதக் கோயில்களாவன ஒரு குறிப்பிட்ட வடிவமைப்பைச் சாஸ்திரீக, சம்பிரதாய, சமயப் பண்பாட்டு விழுமியப் பின்னணிகளுடன் கொண்டு விளங்குகின்றன. இந்து மதமானது அடிப்படையில் சைவம், வைணவம் ஆகிய இரு முக்கிய கூறுகளாக வகுத்துக் கணிக்கப்பட்ட போதும் இந்து கோயில்கள் யாவும் ஏறத்தாழ ஒரே மாதிரியான கட்டமைப்பு வடிவமைப்பைக் கொண்டு விளங்குகின்றன என்பது குறிப்பிடத்தக்கதாகும். சைவமும் வைணவமும் அடிப்படையில் பல தனித்துவ நிலைப்பாட்டைக் கொண்டு விளங்கிய போதும் கலைத்துவ உட்கட்டமைப்பு, வெளிகட்டமைப்பு, உள்வீதி, வெளிவீதி என்பன பொது நிலைப்பாட்டில் ஒன்றே. இந்து மதத்தின் பிறப்புப் பூமியான இந்தியா முழுவதிலும் ஏராளமான இந்து திருத்தலங்கள் செறிந்து காணப்படுகின்றன. ஆயினும் அடிப்படையில் இந்துக் கோயில் கட்டமைப்பானது மாநிலத்துக்கு மாநிலம் வேறுபட்டுக் காணப்படுகின்றன. இக்கட்டமைப்பு மாறுபாட்டினை பெரிதும் உட்கட்டமைப்பிலும் வெளி கட்டமைப்பிலும் காணமுடிகின்றது.
எது எவ்வாறாயினும் இலங்கையின் இந்து மதக் கோயில் கட்டமைப்பானது, பெரிதும் தமிழ் நாடு, மற்றும் ஆந்திரா மாநிலக் கோயில் கட்டமைப்பினை ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றன. இந்த வகையில் இன்று பெரும்பாலான திருத்தலங்கள் அவற்றின் முகப்பு நுழைவாயிலினை அடித்தளமாகக் கொண்டே இதன் மேல் பல தளங்களால் அமையப்பெற்ற பாரிய கண்கவர் உயர் கோபுர வடிவங்களை நாம் காணமுடிகின்றது.
இலங்கையின் இந்து ஆலயங்களின் கோபுரங்கள் பெரிதும் இந்திய ஆலயங்களை ஒத்ததாகக் காணப்பட்டபோதும் ஒப்பீடு அடிப்படையில் உயரத்தில் இலங்கை இந்து ஆலயங்களின் ஒட்டுமொத்தத் தளங்கள் அடித்தளப்பரப்பு விஸ்தீரணம், கோபுர உயரம் ஆகியன சற்று சிறியவையாகவே காணப்படுகின்றன. இந்து மதத்தில் தூரத்தே தென்படும் கோபுரம் "தூலிங்கம்" எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுகின்றது.

இலங்கையின் இந்துமதக் கோயில்களாவன பெரும்பாலும் சோழ சாம்ராச்சியம், பாண்டிய மன்னர் ஆட்சிக்காலம், மற்றும் நாயக்க மன்னர் ஆட்சிக் காலத்தின் தொடர்ச்சியாக விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது.ஆலயங்களாவன பல வகையான சமூகப் பணிகளை மேற்கொள்ளும் கேந்திர ஸ்தனமாகவும், கலை வளர்ச்சிக் களங்களாகவும், ஆன்மீக மேம்பட்டு மையங்களாகவும், அரும்பணியாற்றி வருகின்றன. பொதுவாக ஆலயம் என்னும் பதமானது மனதை ஒன்று படுத்தி ஆன்மீக ஈடேற்றத்துக்கு அருள்பாலிக்கும் இடம் எனப் பெயர் பெற்றது என வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன.
பண்டையகால இந்து மத வரலாற்றுச் சுவடுகளை எடுத்து நோக்கும்போது மனிதன் இறைவனை மரங்களுக்கு கீழும், ஆற்றுப் படுக்கைகளை அண்டிய பகுதிகளிலும், குளக்கரைகளுக்கு அருகாமையிலும், குகைக்கு உள்ளும், குன்றின் மேலும், சிறு அளவிலான கோயில்களை அமைத்து வழிபாடுகளை மேற்கொண்டதாக அறிகின்றோம்.இவ்வாறு சிறிய வகையில் அமைக்கப்பெற்ற தலங்கள் காலக்கிரமத்தில் மரத்தாலும் சுண்ணாம்பாலும் செங்கற்களாலும் திருத்தலங்களாக அமைக்கப்பட்டு வழிபடப்பட்டன. இந்து கோயில் அமைப்பானது மனித உடலை ஒத்த அடிப்படையில் தத்துவார்த்த ரீதியில் அமைக்கப்பட்டது என்பது கருத்தாகும்.

காலக்கிரமத்தில் கற்களே ஆலயத்தை அமைக்க அடிப்படை ஊடகமாக மிளிர்ந்தன. அவற்றுள் முக்கிய பங்கேற்ற கற்கள் கருங்கற்களாகும். இந்து ஆலய கோபுரங்களாவன கம்பீரமிக்க கண்கவர் சிற்ப வேலைப்பாடுகள் மிக்கவையாக விளங்குகின்றன.கோபுர வரலாற்றுப் பின்னணியினை எடுத்து நோக்கும் போது நாம் சில அடிப்படை சாதாரண முடிவுகளுக்கு வரமுடிகின்றது. கி.பி 7 ஆம் அல்லது 8 ஆம் நூற்றாண்டுக்கு முன்பே அரிய பல கோபுரங்கள் கட்டப்பட்டமையை நாம் காண முடிகின்றது. இதற்கான ஆதாரத்தினை சங்க இலக்கிய நூல்களிலும், கல்வெட்டுகளிலும் மற்றும் பக்தி இலக்கியங்கள் ஊடாகவும் அறிய முடிகின்றது.

அடிப்படையில் பருத்து விரிந்த அமைப்பைக் கொண்டு விளங்கும் கோபுர அடித்தளம் எவ்வளவு பரந்து காணப்படுகின்றதோ அவ்வளவிற்கு அதன் உயரம் சற்றுக் குறைவானதாகவே காணப்படும் என்பதினை பல வகைப்பட்ட கோபுரங்களை நாம் ஒப்பு நோக்கும்போது கணிப்பிடமுடிகின்றது. சில கோபுர வடிவமைப்பானது மட்டுப்படுத்தப்பட்ட சதுர வடிவமைப்பைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. இத்தகைய மட்டுப்படுத்தப்பட்ட சதுர வடிவமைப்பைக் கொண்ட அடித்தளத்தை அத்திவாரமாகக் கொண்டு விளங்கும் கோயில்களின் கோபுரம் உயர்ந்தவையாக் காணப்படுவது வழமையாகும். அத்துடன் எவ்வழிபாட்டு தெய்வத்தினை மூலமூர்த்தியாகக் கொண்டு விளங்குகின்றதோ அக்குறிப்பிட்ட மூல மூர்த்தியினைப் பற்றியதான திருவிளையாடல் குறிப்புகள், புராண இதிகாச வரலாற்றுக் குறிப்புகள், ஆகியவை நிறைந்த கலையம்ச சிற்பங்கள் அக்கோயிலின் கோபுரங்களை அலங்கரிப்பதை நாம் பொதுவாக காணமுடிகின்றது.

இத்தகைய சிற்பங்களை இந்தியக் கோயில் கோபுரங்களில் நாம் பெரிதும் அன்றும், இன்றும், காண முடிகின்றது. தமிழகக் கோயில்களில் பெரும்பாலானவை உயரிய சிற்ப வேலைபாடுகளைத் தாங்கியவையாக விளங்குகின்றன. ஆயினும் தமிழகம் சிற்பக் கோபுரக் கலை வனப்புக்கு முச்கிய இடம் கொடுப்பதை நாம் காண முடிகின்றது. குறிப்பாகச் சிதம்பரம், வில்லிபுத்தூர் ஆழ்வார் திருக்கோயில், தஞ்சை பிரகதீஸ்வரர் கோயில், மதுரை மீனாட்சியம்மன் ஆலயம், மைலாப்பூர் கபாலீஸ்வரர் திருக்கோயில் என்பன அவற்றுள் சிலவாகும். சில கோயில்களில் கோபுரங்களிலும் பார்க்க முக்கியமானவையாக விளங்குபவை விமானங்களாகும். விமானம் எனக் குறிப்பிட்டு அழைக்கப்படுவது கோயில் கர்ப்பக்கிருகத்துக்கு மேல் கட்டப்பட்டுள்ள அமைப்பாகும். ஒட்டுமொத்தமாக கோபுரக் கட்டமைப்பையும் விமான கட்டமைப்பையும் எடுத்து நோக்குகையில் கட்டமைப்பில் மாற்றம் காணப்படும். விமானக் கட்டமைப்பானது பொதுவாக சிற்பங்கள் அற்ற வட்ட வடிவமானவையாக விளங்குகின்றன.
சில திருத்தலங்களில் முற்காலத்தில் வாயில் முகப்புக் கோபுர உயரத்திலும் பார்க்க கர்ப்பக்கிருகத்துக்கு மேல் அமைக்கப் பெற்ற விமானமே முக்கிய இடம்பெற்று விளங்குகின்றது. அதாவது விமானத்தின் உயரம் கூடியதாகவும் கோபுரத்தின் உயரம் குறைந்ததாகவும் காணப்பட்டன. அத்தகைய கட்டிட அம்சத்தை தற்போதைய கோயில்களில் காண்பது அரிதே.சிவனாலயங்களில் சிவனின் திருவிளையாடல் குறிப்புகள் அடங்கிய சிற்பங்களும், அம்பாள் ஆலயங்களில் அம்பாள் கதைகளை விவரிக்கும் சிற்பங்களும், விஷ்னு ஆலயங்களில் விஷ்னு புராண வரலாறுகளை விபரிக்கும் சிற்பங்களும் மிகையாக உள்ளதான கோபுரங்களை நாம் காணமுடிகின்றது.

இத்தகைய அரிய சிற்பவேலைப்பாடுகள் செறிந்த கோபுரங்களைப் பெரிதும் தென்னிந்தியாவிலே காண முடிகின்றது என்பதை முன்னரும் குறிப்பிட்டோம். ஆயினும் ஏனைய மாநிலங்களான ஒரிசா, மணிப்பூர், மத்திய பிரதேசம், மகாராஷ்டிரம் போன்ற வட இந்திய மாநிலங்களின் இந்து கோபுர அமைப்பு சற்று மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. அவ்வாறே புத்தகயா பௌத்த புனிதத் திருத்தல கோபுர அமைப்பு சதுர வடிவிலான அரிய சிற்பவேலைப்பாடுகள் செறிந்தாக காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மார்க்கம் நகர் மாநகராகிறது

## கனடா தினமான ஜீலை முதலாம் திகதி மாநகரமாகிறது!

ரொறொன்ரோ போன்றே மார்க்கமும் மாநகராக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுத்து வந்ததால் இது குறித்து இறுதி முடிவெடுப்பதற்காக நகர சபையில் வாக்குப்பதிவு நடைபெற்றது. செவ்வாய்கிழமை மாலை நடைபெற்ற இந்த வாக்குப் பதிவில் அனைத்து நகர சபைத் தலைவர்களும் மார்க்கம் மாநகராவதற்கு ஒருமித்த கருத்துடன் ஒப்புதல் வழங்கியுள்ளனர்.

இந்த விடயத்தில் இறுதி முடிவெடுப்பதற்காக மார்க்கம் மாநகரில் வசிக்கும் 50 உள்ளூர் வாசிகளிடையே கடந்த 28 ஆம் திகதி கருத்துக் கேட்கப்பட்டது. அண்ணளவாக 90 நிமிடங்கள் மக்களிடம் நடத்தப்பட்ட ஆலோசனையிலும் பெரும்பான்மையானோர் மாநகராக்கப்பட வேண்டும் என்பதற்கே தங்கள் ஆதரவினைத் தெரிவித்துள்ளனர்.

வரி செலுத்துவோருக்கு மார்க்கம் நகராட்சி மாநகராக மாற்றப்படுவதினால் பெரிய நன்மைகள் ஏதும் கிடைத்து விடப் போவதில்லை என்ற போதிலும் கூட வளர்ச்சிப் பணிகளுக்கு வித்திடும் என்பதால் இதற்கு அனைவரும் தங்கள் ஆதரவைத் தெரிவித்துள்ளனர். மென் தொடருந்து பாதைகள் மார்க்கம் நகரில் விரைவில் உருவாக்கப்படுமா என்ற கேள்விகளும் தற்போது எழுப்பப்பட்டுள்ளது.

மார்க்கம் மேயர் திரு.பிராங் ஸ்காபிற்றியும் ஏனைய நகர சபை உறுப்பினர்களும் மார்க்கம் மாநகரின் வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டு செயலாற்றி வருவது குறிப்பிடத்தக்கது. முதலாவது இலங்கைத் தமிழ் அங்கத்தவரான திரு.லோகன் கணபதியை கொண்ட பெருமைக்குரியது. சீன இனத்தைச் சேர்ந்த அங்கத்தவரான அலெக்ஸ் சியூ கடந்த மாதம் மார்க்கம் நகரசபையினை மாநகர சபையாக்க கோரும் பிரேரணையை சமர்ப்பித்திருந்தார். அதனை ஏற்றுக் கொண்டு அனைத்து அங்கத்தவர்களும் அதற்கு ஆதரவாக வாக்களித்ததினால் மாநகர சபையாக இருந்து வந்த மார்க்கம் ஜீலை முதலாம் திகதி முதல் நகர சபையாகவிருக்கின்றது



# "EI திட்டங்களின் புதிய மாற்றங்களை ஹார்ப்பர் அரசு மீளப்பெற வேண்டும்"

## - பொப் ரே

தேசிய அளவில் திடமானதொரு கருத்தொற்றுமை ஏற்படும் வரையில் வேலைக் காப்புறுதி திட்டங்களில் புதிய மாறுதல்களை புகுத்த ஹார்ப்பர் அரசு முயற்சிக்கக் கூடாது எனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மாறுதல்களை உடனடியாக அரசு திரும்பப்பெற தேசிய அளவில் திடமானதொரு கருத்தொற்றுமை ஏற்படும் வரையில் வேலைக் காப்புறுதி திட்டங்களில் புதிய மாறுதல்களை புகுத்த ஹார்ப்பர் அரசு முயற்சிக்கக் கூடாது எனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மாறுதல் களை உடனடியாக அரசு திரும்பப்பெற வேண்டும் என லிபரல் கட்சியின் இடைக்காலத் தலைவர் பொப் ரே நேற்று பாராளுமன்றில் நடைபெற்ற கேள்வி நேரத்தின் போது வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அரசின் புதிய அறிவிப்பால் பருவகாலச் செய்கைப்பாடு குறித்த பணிகளைச் செய்து வருவோர் கடுமையாக பாதிக்கப்பட நேரும் எனவும் அனைத்து பருவங்களிலும் இவர்கள் பணி புரிவதும் பணிகளை மாற்றிக் கொள்வதும் இயலாத ஒன்று எனவும் பொப் ரே விளங்கப்படுத்தியுள்ளார்.

எனவே இது போன்ற பணியாளர்களுக்கு வேலைக் காப்புறுதி திட்டங்களை அரசு ரத்து செய்யும் பட்சத்தில் அவர்கள் தாங்கள் வசிக்கும் மாகாணத்தின் நலத் திட்டங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டிய சூழல் ஏற்படுமேயொழிய இருக்கும் பணிகளை அனைவரும் புரிய முன்வர வேண்டும் என்ற அரசின் கனவு நனவாகாது எனவும் தெரிவித்துள்ளார்.

வேலைக் காப்புறுதி குறித்தான அரசின் புதிய திட்ட மாறுதல்களில் எதிர்க்கட்சிகள் எப்போதும் மாற்றுக் கருத்துடன் இருப்பதை சுட்டிக் காட்டிய பொப் ரே, மக்களின் அனைத்து ஐயங்களையும் களைந்து விட்டு கருத்தொற்றுமை ஏற்பட்ட பின்னர் இதனை நடைமுறைப் படுத்தலாம் எனவும் அரசுக்கு அறிவுறுத்தியுள்ளார்

# சிறந்த கனடிய குடிவரவாளர்கள் விருதினை பெற்றார் பிரபல சட்டத்தரணி மெலனி டேவிட்



ஆண்டுதோறும் முதல் சிறந்த இருபத்தைந்து குடிவரவாளர்கள் மக்களின் வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவப்படுத்தி canadianimmigrant.ca வருகின்றது. இந்த ஆண்டு சிறந்த குடிவரவாளர்களுள் தமிழ் மக்களால் நன்கு அறியப்பட்ட சட்டத்தரணி மெலனி டேவிட் அவர்கள் முதல் 25 பேர்களுள் ஒருவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வெற்றியாளர்கள் அனைவரும் ஒரு பொதுவான அம்சங்களைக் கொண்டுள்ளார்கள். இவர்கள் மற்றவர்களுக்கு இன்னும் செய்ய வேண்டும், மேலும் சாதிக்க வேண்டும், மற்றவர்களுக்கு மேலும் உதவ வேண்டும் என்ற விடயங்களில் முன்னுதாரணமாக திகழ்வதுடன் அதனை செய்யத் தூண்டுபவர்களாகவும் இருக்கின்றார்கள். இந்த வகையில்,மெலானி டேவிட் அவர்களுக்குக் கிடைத்த வெற்றி புலம்பெயர்ந்த தமிழருக்குப் பெருமை அளிக்கின்றது.

அவர்களில் மறைந்த எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியும் பாராளுமன்ற உறுப்பினருமான ஒலிவியா சோ, மற்றும் சிறந்த ஹிப் கொப் பாடகரும் "weaving flag" பாடலின் மூலம் பிரபல்யமானவருமான ஹனான், எமி விருதிற்குத் தேர்வு செய்யப்பட்ட நடிகரான ரோன்யா லீ வில்லியம்ஸ், ஒலிம்பிக்ஸ் மல்யுத்த வீரரான டானியல் இகாளி ஆகியோரும் இந்த விருதிற்குத் தேர்வு செய்யப்பட்டவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள்.

1995 கனடா வந்தடைந்த இவர் 2001 யோர்க் பல்கலைக்கழகத்தில் உளவியலில் பட்டம் பெற்ற பின் ஒஸ்கூட் ஹோல் சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற இவர் தனது வாழ்க்கையைச் சட்டத்தரணியாக ஆரம்பித்து அதில் வெற்றி பெற்றுள்ளார்.

கடந்த ஆண்டு வீடு விற்பனைமுகவர் ஈசா பரஈசானந்தா, ஆசிரியர் மைதிலி கல்யாணசுந்தரம் ஆகியோர் இந்த விருதினைப் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

www.ekuruvi.com
647-704-4542

# அனைத்து குழந்தைகளுக்கும்

## ரோட்டா வைரஸ் தடுப்பூசிகள் கட்டாயமாக்கப்பட வேண்டும் - கனடிய குழந்தை நல நிபுணர்கள்

கனடாவில் பிறக்கின்ற அனைத்து குழந்தைகளும் ரோட்டா நச்சுயிரி தடுப்பு மருந்துகள் கொடுப்பது கட்டாயமாக்கப்பட வேண்டும் என கனடிய குழந்தை நல மருத்துவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். கனடிய மருத்துவ சங்கத்தின் சார்பில் வெளியாகும் இதழில் இது குறித்து தலையங்கம் எழுதப்பட்டுள்ளது. ரோட்டா நச்சுரி தொற்றினால் குழந்தைகளுக்கு கடுமையான வாந்தி, பேதி ஏற்படுவதோடு அவர்களை வைத்தியசாலைகளில் அனுமதிக்க வேண்டிய சூழலும் நேரிடுகிறது. வளரும் நாடுகளில் இத்தகைய வைரஸ் தொற்றினால் வாந்தி, பேதியால் பாதிக்கப்பட்டு ஆண்டுதோறும் சுமார் 450,000 குழந்தைகள் உயிரிழக்கின்றனர் என்பது ஆராய்ச்சிகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளையே இந்த வைரஸ் அதிகம் தாக்குகிறது என மேற்கு ஒன்ரோறியோவில் உள்ள லண்டன் குழந்தைகள் மருத்துவமனையில் பணியாற்றும் மருத்துவர் மரினா சல்வதோரி கூறுகிறார். இது குறித்த விளக்கக் கட்டுரை ஒன்றினையும் அவர் எழுதியுள்ளார்.

கனடாவைப் பொருத்தவரை பிரிட்டிஷ் கொலம்பியா, ஒன்ரோறியோ, கியூபெக் மற்றும் பிரின்ஸ் எட்வர்ட் தீவு ஆகிய பகுதிகளில் மட்டுமே ரோட்டா வைரஸ் தடுப்பு மருந்துகள் கட்டாயமாக்கப்பட் டுள்ளதாகவும் இதனை நாடு முழுவதும் உள்ள ஏனைய பகுதிகளிலும் கட்டாயமாக்குவதொடு வளரும் நாடுகளுக்கும் இது குறித்த விழிப்புணர்வை உண்டாக்க கனடா முயற்சி மேற்கொள்ள வேண்டும் என கனடிய மருத்துவ சங்க இதழின் ஆசிரியத் தலையங்கத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

### எவ்வாறு பரவுகிறது: ரோட்டா வைரஸ்?

மக்களின் சுகாதாரக் கேடுகளால் தான் பரவுகிறது. கழிவறை சென்று வந்த பின், சோப்பு போட்டு கை கழுவுதல், கையை சுத்தமாக கழுவிய பின், சாப்பாடு உட்கொள்ளுதல் மற்றும் உணவூட்டுதல் போன்ற, மிகவும் அடிப்படை சுகாதார வழிமுறைகளை மேற்கொண்டாலேயே போதும் வாந்தி, பேதி பரவுவதை தடுத்துவிட முடியும்.

### சிகிச்சை முறை:

வாந்தி, பேதியால் குழந்தை பாதிக்கப்பட்டால், உடம்பில் உள்ள நீர்ச்சத்து மிகவும் குறைந்து விடுகிறது. அதனால், குழந்தை மிகவும் சோர்ந்து காணப்படுகிறது. மேலும், தொடர்ந்து போகும் பேதியால், உடம்பில் உள்ள உப்பு மற்றும் நீரின் அளவு மிகவும் குறைவதால், உயிருக்கு ஆபத்தான நிலை ஏற்படுகிறது. எனவே, சிகிச்சையின் முதற்படியே, உடம்பில் உள்ள நீரின் அளவை கூட்டுவது தான். ஆகையால், வாந்தி, பேதி உள்ள குழந்தைகளுக்கு, கண்டிப்பாக தாய்ப்பால் தொடர்ந்து கொடுக்க வேண்டும். தாய்ப்பால் கொடுக்காத குழந்தைக்கு (உதாரணமாக 2 வயதுக்கு மேல்) உப்புக் கரைசல் தண்ணீரை கொடுக்க வேண்டும். ரோட்டா வைரஸ் தடுப்பு சொட்டு மருந்து: நோய்கள் வந்த பின், சிகிச்சை அளிப்பதை விட, வருமுன் காப்பதே சிறந்தது. ரோட்டா வைரஸ் சொட்டு மருந்து (Rotarix), பிறந்த குழந்தைகளுக்கு, ஆறு வாரம் முதல் கொடுக்க வேண்டும். இதை இரண்டு முறை, ஒரு மாதம் இடைவெளியில் கொடுக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

www.ekuruvi.com
# e குருவி

Tamils' Business Connections
www.tamilbizcard.com

சிறகு - 01 | 01.06.2012 | பறப்பு -01

உங்களுக்காகவும், உங்கள் அன்புக்கு உரியவர்களுக்காகவும்...




கொடிய நோய்களால் பாதிக்கப்பட்டால் 2 மில்லியன் வரை காப்புறுதி
நோய் ஏற்படாதுவிட்டால் கட்டிய பணம் முழுவதையும் மீளப்பெறுங்கள்.

**வயோதிபர்களுக்கான காப்புறுதி**

- மருத்துவப் பரிசோதனை வேண்டியதில்லை
- உடனடியாக காப்புறுதித் திட்டம் அமலாகும்
- வேறு நிறுவனங்களால் நிராகரிக்கப்பட்டவர்களும், நீரிழிவு நோயால் இன்சுலின் பாவிப்பவர்களும் பெற்றுக்கொள்ளலாம்

**சிறீதரன் துரைராஜா**
CLU, CHS
MDRT Member of Million Dollar Round Table
Direct: 416.918.9771
759 Warden Ave. Toronto, ON M1L 4B5, Bus: 416-830-0386, 416-300-5496
Life100.ca



Are you getting Million Dollar advice?

24 மணி நேர செய்தித் தளம்
www.ekuruvi.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org